# எமது பாடசாலை எந்தளவிற்குத் தரமானது?



**பாடசாலைக் கல்விப் பண்புத் தரத்தினை உறுதிசெய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறைகள்.**

கல்வி அமைச்சு.

எமது பாடசாலை எந்தளவிற்குத் தரமானது?

# பாடசாலைக் கல்விப் பண்புத் தரத்தினை உறுதிசெய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறைகள்.

கல்வி அமைச்சு.
இசுறுபாய,
பத்தரமுல்ல
2014

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி | 1 |
| கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து... | 2 |
| கல்விப் பண்புத் தர அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளரிடமிருந்து... | 3 |
| முகாமை, தர உறுதிப்பாட்டு அலகின் பணிப்பாளரிடமிருந்து... | 4 |
| அறிமுகம் | 5 |
| மதிப்பீட்டுத் துறைகளின் அறிமுகம். | 7 |
| மதிப்பீட்டுப் படிவம் 01 - மாணவர் அடைவு | 8 - 15 |
| மதிப்பீட்டுப் படிவம் 02 - கற்றல் கற்பித்தல் மதிப்பீடு | 16 - 18 |
| மதிப்பீட்டுப் படிவம் 03 - முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | 19 - 21 |
| மதிப்பீட்டுப் படிவம் 04 - இணை பாடவிதான செயற்பாடுகள் | 22 - 24 |
| மதிப்பீட்டுப் படிவம் 05 - மாணவர் நலன்புரி | 25 - 27 |
| மதிப்பீட்டுப் படிவம் 06 - தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | 28 - 33 |
| மதிப்பீட்டுப் படிவம் 07 - பௌதீக வள முகாமைத்துவம் | 34 - 36 |
| மதிப்பீட்டுப் படிவம் 08 - பாடசாலையும் சமூகமும் | 37 - 39 |
| புள்ளி வழங்கல் | 40 - 42 |
| தர உறுதிப்பாடு தொடர்பான வினாக்கள் | 43 - 45 |
| சுற்று நிருபமும் பின்னிணைப்புக்களும். | 46 - 51 |

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

தற்போதைய அரசின் அடிப்படை நோக்கமானது துரித பொருளாதார சமூக அபிவிருத்திக்காக தேவைப்படும் திறன்கள் மற்றும் தொழினுட்பத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு கல்வி முறைமையாகும். கல்விக்காக அரசொன்றினால் அல்லது தனிநபரொருவரால் செலவழிக்கப்படும் காலம், உழைப்பு, வளங்கள் போன்றன அந்த சமூகத்தினுடைய நீண்டகால பயனைப் பெற்றுத் தருகின்ற ஒரு முதலீடாகும்.

எந்த ஒரு நாட்டினதும் சமூகத்தினுடைய நடத்தைப் பண்புகள் அந்நாட்டின் கல்வியின் பண்புத் தரத்தின் ஓர் அளவுகோலாகும். தரமான வாழ்க்கை முறைமை ஒன்றுடன் கூடிய பண்பான சமூகமொன்றை உருவாக்க முடிவது சிறப்பான கல்விச் செயற்பாட்டினூடாக மாத்திரமேயாகும்.

இந்த முக்கிய நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக பாடசாலைத்தொகுதியின் பண்புத்தர விருத்தியை மையப்படுத்திய கல்வி முகாமைத்துவ செயற்பாடொன்றின் அவசியம் உணரப்படுகின்றது. ஏதாவது நிறுவனமொன்று அல்லது அமைப்பொன்று உரிய இலக்கின் அடிப்படையில் பயணிக்கின்றதா என்பதைத் தொடர்ச்சியாக கண்காணித்து தேவையான திருத்தங்களைச் செய்வதற்கான மதிப்பீடு அவசியமான விடயமொன்றாகும். மதிப்பீடொன்று இல்லாதவிடத்து நிர்வாக, முகாமைச் செயற்பாடுகள் சீர்குலைந்து விடும்.

“மதிப்பீடு” என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை இனங்கண்டு புதிய போக்கு மற்றும் ஒப்பீட்டு அடிப்படையில் மதிப்பீட்டுச் செயற்பாட்டினை தற்காலப்படுத்தும் அவசியத்தின் அடிப்படையில் இப்புதிய செயன்முறைமையினை அறிமுகம் செய்ய கல்வியமைச்சின் முகாமை, தர உறுதிப்பாட்டு அலகு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பரந்த அடிப்படையில் மாற்றத்துக்குள்ளாகும் சமூகச் சூழலினுள், எதிர்பார்க்கப்படும் நோக்கத்தின்பால் பாடசாலை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்யவும், பாடசாலையிலுள்ள வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்படுகின்றனவா, முக்கிய எதிர்பார்ப்புக்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை இனங்காண்பதற்காக இப்புதிய மதிப்பீட்டு வழிகாட்டல் முறைமையினை அறிமுகம் செய்ய ஆலோசிக்கப்பட்டுள்ளது. பாடசாலையினுள் மதிப்பீட்டு நடவடிக்கையினை மேற்கொள்கின்றபோது, இவ்வழிகாட்டல் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளை நெகிழ்வுத்தன்மை கொண்டதாகவும், புத்தாக்கம் உடையனவாகவும் பயன்படுத்தி பாடசாலையில் இருக்கின்ற பலங்களைப் போன்றே பலவீனங்களையும் இனங்கண்டு பாடசாலையை தற்போதைய நிலையிலிருந்து உயர்த்துவதற்காக, பாடசாலை உள்ளிட்ட சகல கல்வி நிறுவனங்களினதும் செயற்றிறன்மிக்க பங்களிப்பினை எதிர்பார்க்கின்றேன்.

பந்துல குணவர்தன,
கல்வி அமைச்சர்.

## கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து...

ஒரு நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்குரிய அடிப்படை தரமான கல்வி முறைமையொன்றாகும். கல்வித்துறையின் ஒட்டுமொத்த செயற்பாட்டின் முதன்மை நோக்கமானது சிறார்களுக்கு தரமான அதிசிறந்த சேவையை வழங்குவதாகும்.

பாடசாலையில் இருக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட பௌதீக மற்றும் மனித வளங்களை, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்காக உச்சளவில் பயன்படுத்துவது கட்டாயமானதாகும்.

பாடசாலை மதிப்பீட்டு நடவடிக்கையொன்றின் நோக்கமாவது மேற்கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா எனப் பரிசீலிப்பதாகும். அதில் சகல பாடசாலைகளிலும் பல்வகைத் தன்மையினை கவனத்திற் கொள்ளாது பொதுப் பண்புத்தர நியதிகள் மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்ட சுய மதிப்பீட்டு முறைமையைப் போன்றே பாடசாலையுடன் தொடர்புபட்ட வெளியாளர்களினால் மேற்கொள்ளப்படும் வெளியக மதிப்பீட்டு முறைமையும் கட்டாயமானதாகும். அவ்வாறு அமுலாக்கப்படும் சக்திமிக்க நம்பிக்கையுடன் கூடிய மதிப்பீட்டு நடவடிக்கையின் மூலமாக சகல பாடசாலைத் தொகுதிகளையும் தரத்துடன் கூடிய சிறந்த நிலைக்குக் கொண்டு வர முடியும்.

பாடசாலையின் உள்ளக மதிப்பீட்டு முறைமையினை தொடர்ச்சியாக இடம்பெறச் செய்வது போன்றே ஒவ்வொரு உள்ளக மதிப்பீட்டின் பின்பும் அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தினால் பாடசாலையின் பண்புநிலை பற்றி மீளாய்வொன்றை மேற்கொண்டு தங்கள் பலத்தைப் போன்றே அபிவிருத்தித் தேவையினை ஒன்றிணைந்து இனங்காண்பது பயன்மிக்கதாகும். அதில் பலமான விடயங்களை உயர்வாக மதிப்பிடுவதுடன் இனங்காணப்பட்ட விருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்களுக்கு பரிகாரங்களைக் காண்பதற்கும் இடம் கிடைக்கும். தேசிய, மாகாண, வலய, கோட்ட மட்டங்களில் இடம்பெறுகின்ற வெளிவாரி மதிப்பீடுகளின் சிபார்சுகளை பாடசாலையின் அபிவிருத்திக்காக கொண்டுசெல்லல் சிறந்த பங்களிப்பை வழங்கும்.

பாடசாலைக்கல்வியின் பண்புத்தரத்தை உறுதி செய்வதற்கான கல்வி அமைச்சின் முகாமை தரஉறுதிப்பாட்டு அலகினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த “பாடசாலைக்கல்விப் பண்புத்தரத்தினை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறை” நூலினைத் தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்த பாடசாலை, கோட்டம், வலயம், மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான அனைவருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

## கல்விப் பண்புத் தர அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளரிடமிருந்து...

பாடசாலை என்பது கல்வித்துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகும். பாடசாலையில் இடம்பெறுகின்ற செயற்பாடுகள் சிறப்பாக முகாமை செய்யப்படுவதனால் பாடசாலயிலிருந்து வெளிவருகின்ற மாணவர் சமூகம் நாட்டுக்கு பயன்மிக்க ஓர் பகுதியினராக உருவாகின்றனர்.

மேற்படி நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு உள்ளக மதிப்பீட்டு முறைமையை பாடசாலையினுள் ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் அமுலாக்குவது அவசியமானதொன்றாகும். மதிப்பீட்டுக் கருவிகளை வினைத்திறன்மிக்கதாக பயன்படுத்தல் மற்றும் இலகுவான முறையில் பாவித்தல் மூலமாக சிறந்த மதிப்பீடொன்றினை நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும். அதனூடாக மாற்றம் பெறுகின்ற சமூக தேவைகளுக்கேற்ப பாடசாலை நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தல், மனித மற்றும் பௌதிக வளங்களை வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்தல், ஆசிரிய அபிவிருத்தி தேவையினை அடையாளம் காணல் மற்றும் பாடசாலைக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பினை வலுவூட்டுவதற்கான வழிகாட்டல் போன்ற பல்வேறுபட்ட அனுகூலங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். அவ்வாறே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக்க இந்த விடயம் மிகவும் முக்கியமானதொன்றாகும்.

பாடசாலையினுள் வலுவான உள்ளக மதிப்பீட்டுச் செயன்முறையினை தாபித்தல் போன்றே தன்னுடைய பலத்தினையும் மாற்றம் பெறவேண்டிய துறைகள் பற்றியும் சரியான வழிகாட்டலொன்றை வழங்கும் வெளியக மதிப்பீட்டு முறையொன்று அவசியமானதாகும். பாடசாலைக்கு வெளி நிறுவனங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட செயன்முறைகளின்படி வெளியக மதிப்பீட்டினை மேற்கொள்வதனூடாக பாடசாலைத்தொகுதியின் பண்பு விருத்தியினை அடைந்து கொள்வது இலகுவான விடயமாகும்.

மேற்படி சகல நோக்கங்களையும் முன்னிலைப்படுத்தி கல்வித்துறையில் காலத்திற்குக் காலம் நிகழ்கின்ற மாற்றங்களின் அடிப்படையில் இதுவரை நடைமுறையிலிருந்த மதிப்பீட்டு முறைமைக்கு பொருத்தமாக சிற்சில மாற்றங்களை உள்வாங்கி இந்த “பாடசாலைக்கல்விப் பண்புத்தரத்தினை உறுதி செய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறை” தயார் செய்யப்பட்டுள்ளது.

இது மிகவும் இலகுவான படைப்பாகவும் சுட்டிகளை மையப்படுத்திய மதிப்பீட்டுச் செயல்வடிவம் என்பதனையும் இதனுடன் சம்பந்தப்பட்ட சகல செயன்முறைகள் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு செயல்வடிவத்தை அமுலாக்குவதன் மூலம் கல்வித்துறையின் பண்புசார் விருத்தினை உறுதிசெய்தலானது சகல கல்வி உத்தியோகத்தர்களினதும் கடமையாகும்.

எச்.யு.பிரேமதிலக்க,
மேலதிக செயலாளர்,
கல்வித்தர அபிவிருத்திப்பிரிவு,
கல்வியமைச்சு.

## முகாமை, தர உறுதிப்பாட்டு கிளையின் பணிப்பாளரின் செய்தி...

பண்புசார் கல்வி பற்றிய கனவை யதார்த்தமாக்கிக் கொள்ளும் நோக்கில் பாடசாலைகளில் முகாமைத்துவ செயற்பாடு கல்வித்துறைக்கு உள்ளீடாக மேற்கொள்ளப்படும் பௌதீக, மனித வளங்களை உரிய தரத்தில் முகாமை செய்யப்படுவதனூடாக இந்த சவால்களை வெற்றி கொள்ள முடியுமென்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

இவற்றுக்குத் தேவையான வளங்களை வழங்குவது போன்று இந்த நிறுவனங்களில் இடம்பெறுகின்ற நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தலும் வேண்டும். மதிப்பீட்டுச் செயற்பாடுகள் வாயிலாக பாடசாலைத்தொகுதியின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் இனங்காணப்படுவதனூடாக சிறந்த வினைத்திறன் மற்றும் பயனுறுதிமிக்க பாடசாலை முறைமையொன்றைக் கட்டியெழுப்பமுடியும்.

2001ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைகளுக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட மதிப்பீட்டு முறை தற்காலத் தேவைக்கேற்ப பல்வேறு திருத்தங்களுக்கு உட்பட்டுள்ளது. இதுவரை பாடசாலைத்தொகுதியில் நடைமுறையிலுள்ள ‘‘பாடசாலை கல்விச் செயற்பாடுகளின் பண்புசார் விருத்தி III தேசிய கல்வித் தர உறுதிப்பாட்டு வழிகாட்டி’’ பல திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு 2015ஆம் ஆண்டிலிருந்து ஒரு புதிய மதிப்பீட்டு வழிகாட்டியாக அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய மதிப்பீட்டு வழிகாட்டிக்கு அமைவாக மாணவர் அடைவு, கற்றல் கற்பித்தல் மதிப்பீடு, முறையான கலைத்திட்ட முகாமைத்துவம், இணை பாடவிதான செயற்பாடுகள், மாணவர் நலன்புரி, தலைமைத்துவமும் முகாமைத்துவமும், பௌதீக வள முகாமைத்துவம், பாடசாலையும் சமூகமும் ஆகிய பிரதான 08 துறைகளின் கீழ் 60 நியதிகளும் 210 சுட்டிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் கீழ் தர ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் மதிப்பீடுகள் பாடசாலைகளில் இடம்பெறுகின்ற அதேவேளை பண்புத்தரத்தை மேலும் உறுதிசெய்யும் பொருட்டு அதிபரையும் பாடசாலையின் ஆசிரியர் குழாத்தையும் அழைத்து கலந்தாலோசிப்பதுடன் பண்புத்தரம் தொடர்பான வினாக்கள் சிலவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதே போன்று உள்ளக மதிப்பீட்டு முறைமையினால் வெளிக் கொண்டுவரப்படக்கூடிய விருத்தி செய்யப்பட வேண்டிய அம்சங்கள் ஐந்தைத் தெரிவுசெய்து அடுத்த வருட திட்டமிடல் செயற்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

“பாடசாலைக் கல்விப் பண்புத் தரத்தினை உறுதிசெய்வதற்கான மதிப்பீட்டுச் செயன்முறைகள்” என்ற இந்தப் புதிய வழிகாட்டி தயாரிப்பதற்கு உதவிய கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாண , வலய தர உறுதிப்பாட்டு இணைப்பதிகாரிகள், ஆசிரியஆலோசகர்கள், அதிபர்கள், மற்றும் ஆசிரியர்கள் வழங்கிய ஒத்துழைப்பை மேலாக மதிக்கின்றேன்.

எஸ்.எம்.எல்.கே.செனவிரத்ன,
கல்விப் பணிப்பாளர்(முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளை)
கல்வி அமைச்சு.

## 1. அறிமுகம்

கல்விக்காக முதலீடு செய்யப்படுகின்ற பௌதீக மற்றும் மனிதவளத்தினை உரியதரத்தில் முகாமை செய்வதனூடாக பயனுறுதிமிக்க உயர்ந்த வினைத்திறனுடைய பாடசாலைத் தொகுதியொன்றினை கட்டியெழுப்ப முடியும். இந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு கல்விப் பண்புசார் தரத்தினை உறுதிசெய்வதனை நோக்காகக் கொண்ட பயனுறுதிமிக்க, வினைத்திறனுடைய முகாமைத்துவச் செயற்பாடுகளைப் போன்றே பலம்மிக்க தொடர் மதிப்பீட்டு முறைமையொன்றை பாடசாலைத் தொகுதியினுள் உருவாக்குவது அத்தியாவசியமாகும். இங்கு பாடசாலைகளில் காணப்படுகின்ற பல்வகைமைக்குப் பொருத்தமான பொதுநியதிகள் மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்ட சுயமதிப்பீட்டு முறையைப் போன்றே அச் சுயமதிப்பீட்டினை மேலும் பயனுள்ளதாக்குவதற்கு வழிகாட்டும் முறையான வெளியக மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

இலங்கையில் மதிப்பீடுகள் தொடர்பாக வெளியிடப்படுகின்ற விடயங்களை நோக்கும் போது 1950 ஆம் ஆண்டிலிருந்து கல்வி நிறுவனங்களின் மூலம் பாடசாலைகளில் குழுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுவது போன்றே திடீரென மேற்கொள்ளும் குழுப் பரிசோதனைகளும் நடைபெற்றன. இங்கு பாடசாலைகளில் நடைமுறையிலிருந்த பதிவேடுகளும், அறிக்கைகளும், ஆசிரியர் கற்பித்தல் போன்றன பரிசோதனைகள் அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டன. அம்மேற்பார்வை முறையானது உயர்மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதனால் பாடசாலைகளிடத்திலும், விசேடமாக ஆசிரியர்களிடத்திலும் தெளிவொன்று காணப்படவில்லை. அவ்வாறே தனிப்பட்ட வற்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதையும் காணக்கூடியதாக இருந்தது. அநேகமாக “மேற்பார்வை என்பது குறைகளைத் தேடுவதற்கேயாகும்” என்ற மனோபாவத்தை ஆசிரியர்களிடத்திலும் பாடசாலை நிர்வாகத்திலும் ஏற்படுத்தியது. அதன் பிரகாரம் கல்வியின் குறிக்கோள்கள் பற்றி தெளிவுபடுத்திக் கொள்வதுடன், காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்புடையதான மற்றும் பக்கச்சார்பற்ற முறையொன்றினை கட்டியெழுப்புவதுடன் பொதுவான சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைமையின் தேவை எழுந்ததால் குறைகளைத் தேடுவதைத் தவிர்த்து பாடசாலைகளைப் பலப்படுத்துவதற்கு உதவி புரிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறே 1980 களின் பின் பல்வேறு நாடுகளின் பாடசாலைத் தொகுதிகளில் காணக்கூடிய முகாமைத்துவச் செயற்பாடுகளின் மாறுபடும் விசேட அம்சங்களாக மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் முகாமைத்துவத்திற்குப் பதிலாக கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் முகாமைத்துவப் படிமுறை தொடர்பாக கவனத்தைச் செலுத்தவேண்டிய தேவை அறிவூட்டப்பட்டது. இதன் விளைவுகளாக பாடசாலை மட்டத்தில் தீர்மானம் எடுக்கும் ஆற்றலும், அத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் சுயாதீனத் தன்மையும் பாடசாலை முகாமைத்துவத்திற்குக் கிடைத்தது.

மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் முகாமைத்துவச் செயற்பாடுகளின் போது வெளி ஆலோசகர்கள் மற்றும் பரிசோதகர்கள் பாடசாலைக்குத் தமது அறிவைக் கொண்டுவந்து அவ்வறிவின் ஊடாக பாடசாலையை முகாமைத்துவம் செய்வதற்கு பாடசாலை நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குவதோடு அதன் பிரகாரம் நிர்வாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது தொடர்பாக அவதானத்துடன் இருத்தலும் இடம்பெற்றது. அவர்களின் அவதானம் அதிகமாக பெறுபேறுகளை நோக்கி அல்லாது பாடசாலையின் தற்போதைய நிலையையோ அல்லது அதற்குரிய காரணி பற்றி ஆழமாக அறிந்து கொள்வதற்காக அல்ல. அவ்வாறே பாடசாலைக் கல்விக்கான பண்புசார் நிலையை விட அளவுசார் நிலையே அதிகமாக உட்படுத்தப்பட்டது. இம்முறையைப் புறக்கணித்த நாடுகள் கல்வி அபிவிருத்திக்காக கீழிருந்து மேல் நோக்கி மேற்கொள்ளப்படும் முகாமைத்துவத்தில் நம்பிக்கை கொண்டு வெளிவாரியாக

மேற்கொள்ளும் மேற்பார்வைக்கு மாற்றீடாக பாடசாலையின் உள்ளேயே தமது செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக சுயமதிப்பீட்டு முறையை பயன்படுத்தின.

1990 ஆம் ஆண்டுகளிலிருந்து பரிசோதனை முறையை விட மதிப்பீட்டுச் செயற்பாடுகளின் முக்கியத்துவம் பற்றி கூடுதலாக கவனம் செலுத்தியதோடு, அறிவைக் கட்டியெழுப்புதல் மற்றும் அதை அடைந்து கொள்ளும் நோக்கில் கல்வியில் பிரதேச நிர்வாக அலகு/ நிறுவனங்களிடம் காணப்பட்ட தீர்மானம் எடுக்கும் உரிமையை பாடசாலைக்கு வழங்குவதற்கும், அங்கு பாடசாலை ஒழுங்கமைப்பை உருவாக்கத் தேவையான நுட்பக் கருவியாக சுய மதிப்பீட்டை விருத்தி செய்து கொள்வதற்கு உதவின. இது அபிவிருத்திச் செயற்பாட்டை பாடசாலை மூலமாகவே சுய விசாரணைக்கு உட்படுத்தும் ஒரு செயன்முறையாகும். இது பற்றி ஆய்வாளர்கள் தெளிவுபடுத்துவது என்னவென்றால் வெளி ஆலோசனைகளின் மட்டத்தில் பாடசாலை முகாமைத்துவத்தில் நேரடியாக தலையிடுவதை விட அனுசரணையாளர்களாக செயற்படுவது சிறந்ததாகும்.

இலங்கையின் தற்போதைய மதிப்பீட்டுமுறைமை பற்றிப் பார்க்கும்போது 2001 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சில் மதிப்பீடு மற்றும் தர உறுதிப்பாட்டு அலகினை நிறுவியமை சிறப்பானதொரு திருப்பு முனையாகக் கூறலாம். 2004 ஆம் ஆண்டில் அவ்வலகு முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகாக புதுப்பொலிவு பெற்றதும் 2005 ஆம் ஆண்டு பாடசாலை உள்ளக மதிப்பீடு பற்றிய வழிகாட்டி நூல் மற்றும் 2007 ஆம் ஆண்டில் கல்வித் தர உறுதி மற்றும் வெளிவாரி மதிப்பீட்டு வழிகாட்டி நூல் என்பன கல்விப்புலத்திற்கு அறிமுகப்படுத்தியதும் எதிர்கால மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்கு சிறந்த பிரவேசமாக அமைந்தது. 2009 ஆம் ஆண்டில் தேசிய கல்வித் தர வழிகாட்டல் கைநூலை அறிமுகப்படுத்தியதன் மூலம் பாடசாலையின் உள்ளக மற்றும் வெளியக மதிப்பீடு பற்றி முறையான செயன்முறையொன்று தாபிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் இப்புதிய மதிப்பீடு மற்றும், மேற்பார்வைப் படிமுறை (சுற்றுநிருப இல. 2008/06) மூலம் பாடசாலைகளில் சுயமதிப்பீட்டை பலப்படுத்துவதற்கு சில வசதிகள் வழங்கப்பட்டன. அதன் மூலம் பாடசாலைகளின் உள்ளக மதிப்பீட்டுக் குழுவை நியமித்தல், பாடசாலை மட்டத்தில் இலகுவான உள்ளக மதிப்பீட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல், பாடசாலைத் தரவட்டத்தை அமைத்தல், வகுப்பறை மேற்பார்வை, மாணவர் அடைவுமட்டத்தை ஆய்வு செய்தல் மற்றும் வருடாந்த முழு மதிப்பீட்டின் மூலம் பாடசாலையின் பலம், மற்றும் பிரச்சனைகளை இனங்காணல் என்பவற்றிற்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது.

இம்முறைமை பாடசாலைகளில் பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், தற்போதைய தேவைகளுக்கு பொருந்தும் வகையில் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளின் பண்புசார் விருத்தியை வளப்படுத்துவதில் புதிய மதிப்பீட்டுக் கலாச்சாரம் ஒன்றை நிறுவும் காலத்தின் தேவையெழுந்துள்ளது. இங்கு நிலைமையை உறுதிப்படுத்தும் (தர உறுதிப்பாடு) சிந்தனை மூலம் பாடசாலைகளின் பண்புசார் நிலையை உறுதிப்படுத்துவதற்கான நியதிகளை அடிப்படையாகக்கொண்ட மதிப்பீட்டு முறையொன்றின் தேவையேற்பட்டிருப்பதால் அதன்படி ஒத்துப்போகும் வகையில் நடைமுறையிலுள்ள மதிப்பீட்டு முறை சிற்சில திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தேவை கருதி தயாரிக்கப்பட்ட இந்த உள்ளக மற்றும் வெளியக மதிப்பீட்டு வழிகாட்டி 2015 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைகளுக்கு அறிமுகம் செய்வதன் மூலம் இலங்கையின் கல்வியில் மதிப்பீடு பற்றிய புதிய கலாச்சாரத்தை உண்டாக்குவதற்கு வழிவகுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விடயத்துக்காக தயாரிக்கப்பட்ட புதிய தர உறுதிப்பாடுகள், மதிப்பீட்டு நியதிகள் மற்றும் சுட்டிகள் மூலம் பாடசாலைகளில் பலமான சுயமதிப்பீட்டு முறையொன்றை செயற்படுத்துவதற்கும் வெளியாட்களின் மூலம் பாடசாலையை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதால் பாடசாலை உன்னதமான முன்னேற்றப் பாதையை நோக்கிப் பிரவேசிப்பதற்கு வழிகாட்டலொன்றை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. மதிப்பீட்டுத் துறைகளின் அறிமுகம்

நியதிகளையும், சுட்டிகளையும் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறையை மேலும் வலுவூட்டுவதற்கான செயலொழுங்கு எட்டு மதிப்பீட்டு துறைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய ஒவ்வொரு மதிப்பீட்டுத்துறைக்கும் பொருத்தமான பண்புத்தரங்கள் அவற்றை அடைவதற்கான தேவைப்பாடுகள் மதிப்பீட்டு நியதிகள், சுட்டிகள், பண்பு ரீதியான வினாக்கள் (கலந்துரையாடுவதற்காக) இந்த வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
இவை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.



### கல்வியின் பண்புத்தரத்தை உறுதி செய்வதற்கான புதிய மதிப்பீட்டு வேலைத்திட்டம்

| இல | மதிப்பீட்டுத்துறை | பண்புத்தரம் | பண்புத்தரத்தை அடைவதற்கான தேவைப்பாடுகள் | நியதிகள் | சுட்டிகள் | பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவதற்கான வினாக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாணவர் அடைவு | 02 | 03 | 05 | 35 | 05 |
| 2 | கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு | 02 | 05 | 04 | 30 | 07 |
| 3 | முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | 01 | 03 | 08 | 25 | 05 |
| 4 | இணை பாடவிதான செயற்பாடுகள் | 01 | 03 | 05 | 14 | 04 |
| 5 | மாணவர் நலன்புரி | 01 | 04 | 09 | 22 | 04 |
| 6 | தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | 01 | 07 | 16 | 45 | 07 |
| 7 | பௌதீக வள முகாமைத்துவம் | 01 | 02 | 08 | 26 | 04 |
| 8 | பாடசாலையும் சமூகமும் | 01 | 03 | 05 | 13 | 04 |
| | மொத்தம் | 10 | 30 | 60 | 210 | 40 |

# 1. மாணவர் அடைவு

| பண்புத்தரம் | தேவைப்பாடுகள் | நியதிகள் |
| --- | --- | --- |
| ஆரம்ப வகுப்புக்களில் கணிப்பீட்டின் மூலம் தேர்ச்சியினை அடைவதை உறுதிசெய்தல் | ஆரம்ப வகுப்புக்களில் கணிப்பீட்டின் மூலம் தேர்ச்சியினை அடைவதை உறுதிசெய்தல் | கலைத்திட்ட நோக்கத்தினை அண்மித்தல் |
| வினைத்திறனான பின்னூட்டலின் மூலம் மாணவர் அடைவு மட்டத்தை உயர்த்துதல் | இடைநிலை வகுப்புகளில் அளவுரீதியாகவும் பண்புரீதியானதுமான மதிப்பீட்டின் மூலம் மாணவர் அடைவு மட்டத்தை அடைவதை உறுதி செய்தல் | தேசிய மட்டத்திலான பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளல் |
| | தகவல் பகுப்பாய்வின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிப்பாடுகளின் மூலம் வினைத்திறனான பின்னூட்டல செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் | தவணைப் பரீட்சைப் புள்ளிகளின் முன்னேற்றத்தை அளவிடல் |
| | | பாடசாலை மட்ட கணிப்பீட்டு முன்னேற்றத்தை அளவிடல் |
| | | அடைவு மட்டப் பகுப்பாய்வு |



மதிப்பீட்டுப் படிவம் 01 - அ

# மாணவர் அடைவு
## 1.1 ஆரம்ப பிரிவு

ஒவ்வொரு மட்டத்திலும் மாணவர் பெற்ற அடைவு நூற்று வீதத்துக்கேற்ப புள்ளி வழங்கவும்.

| | | |
|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை 90% உம் மேலும் | - அதிசிறப்பு | - 6 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 75% -89% வரை | - மிக நன்று | - 5 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 60% -74% வரை | - நன்று | - 4 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 45% -59% வரை | - சாதாரணம். | - 3 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 25% -44% வரை | - அபிவிருத்தி அடைய வேண்டும். | - 2 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 25% இற்குக் குறைவு | - விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும். | - 1 புள்ளி |

1.1.1 கலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைதல் (ஆரம்பப்பிரிவு) (அட்டவணை 1.1.1)

| | சுட்டிகள் | மொத்த மாணவர் தொகை | தேர்ச்சி மட்டங்களை அண்மித்த மாணவர் % | புள்ளி |
|---|---|---|---|---|
| 1.1.1.1 | முதன்மைநிலை ஒன்றுக்குரிய தேர்ச்சிகள் 40 யும் அடைந்தோர். | | | |
| 1.1.1.2 | முதன்மைநிலை இரண்டுக்குரிய தேர்ச்சிகள் 52 யும் அடைந்தோர். | | | |
| 1.1.1.3 | முதன்மைநிலை மூன்றுக்குரிய தேர்ச்சிகள் 55 யும் அடைந்தோர் | | | |

1.1.2 தேசியமட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் (அட்டவணை 1.1.2)

| | சுட்டிகள் | பரீட்சைக்குத் தோற்றிய மாண-வர் தொகை | நூற்று வீதம | புள்ளி |
|---|---|---|---|---|
| 1.1.2.1 | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ...................................................................................... ஒப்பம் : ...................................................

திகதி : ..................................................

ஆரம்பப்பிரிவு மாணவர் அடைவை மதீப்பீடுவதற்கான பொது அறிவுரைகள்

| | |
|---|---|
| 1. கலைத்திட்ட நோக்கத்தை அண்மித்தல். (ஆரம்பக் கல்வி) அட்டவணை 1.1.1 | ஒவ்வொரு முதன்மைநிலை முடிவிலும் தயாரிக்கப்படும் தேர்ச்சி அறிக்கைக்கு ஏற்ப சுட்டிகள் 1.1.1, 1.1.2, 1.1.3 ஆகியவற்றுக்கேற்ப புள்ளிகளைக் கணக்கிட வேண்டும்.<br><br>ஒவ்வொரு முதன்மை நிலை தொடர்பாக உரிய தேர்ச்சிகள் அனைத்தையும் அடைந்துள்ள மாணவர்களின் சதவீதத்தைக் கணிப்பீடு செய்யும் போது குறித்த வகுப்பின் சமாந்தரப் பிரிவுகள் அனைத்திலும் உள்ள முழு மாணவர் தொகையில் உரிய தேர்ச்சிகளை அண்மித்துள்ள மாணவர் தொகை நூற்று வீதமாகக் கணிப்பீடு செய்யப்பட வேண்டும்.<br><br>உதாரணம்<br><br>பாடசாலை ஒன்றில் 2014 ம் வருட முடிவில் தரம் 2 (முதன்மைநிலை ஒன்று) மாணவர்களில் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை அண்மித்த மாணவர்களின் நூற்று வீதம் பின்வருமாறு கணிக்கப்படும்.<br>தரம் 2 சமாந்தர பிரிவுகளின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 150 ஆகும்.<br>இவர்களில் முதன்மைநிலை ஒன்றுக்குரிய 40 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளையும் அண்மித்த மாணவர்களின் எண்ணிக்கை 120 ஆகும். இதன்படி முதன்மைநிலை ஒன்றின் 40 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளையும் அண்மித்த மாணவர்களின் நூற்று வீதம் பின்வருமாறு<br>120/150 x 100 = 80% |
| அட்டவனை 1.1.2 | இந்த நியதி தொடர்பாக புள்ளிகளை வழங்கும் போது மதிப்பீடு மேற்கொள்கின்ற தினத்தில் பாடசாலை பெற்றுக் கொண்ட இறுதி பரீட்சை பெறுபேற்று அட்டவணைக்கேற்ப புள்ளிகளை வழங்க வேண்டும். |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ............................................................................................ ஒப்பம் : ..................................................

திகதி : ..................................................

மதிப்பீட்டுப் படிவம் 01 - ஆ

## மாணவர் அடைவு
## 1.2 இடைநிலைப் பிரிவு

ஒவ்வொரு மட்டத்திலும் மாணவர் பெற்ற அடைவு நூற்று வீதத்துக்கேற்ப புள்ளி வழங்கவும்.

| | | |
|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை 90% உம் மேலும் | - அதிசிறப்பு | - 6 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 75% -89% வரை | - மிக நன்று | - 5 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 60% -74% வரை | - நன்று | - 4 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 45% -59% வரை | - சாதாரணம். | - 3 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 25% -44% வரை | - அபிவிருத்தி அடைய வேண்டும். | - 2 புள்ளி |
| மாணவர் எண்ணிக்கை 25% இற்குக் குறைவு | - விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும். | - 1 புள்ளி |

1.2.1 தேசியமட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் (அட்டவணை 1.2.1)

| | சுட்டிகள் | நூற்று வீதம | புள்ளி |
|---|---|---|---|
| 1.2.1.1 | சாதாரணதரப் பரீட்சையில் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றவர்கள் | | |
| 1.2.1.2 | உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள். (கலைத்துறை) | | |
| 1.2.1.3 | உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் (வர்த்தகத்துறை) | | |
| 1.2.1.4 | உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் (உயிரியல் விஞ்ஞானத் துறை) | | |
| 1.2.1.5 | உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் (பௌதிக விஞ்ஞானத்துறை) | | |
| 1.2.1.6 | உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்கள் (தொழில்நுட்பத்துறை) | | |

1.2.2 தவணைப் பரீட்சையின் புள்ளிகள்

(மேலதிக பாடங்கள் இருப்பின் அதற்கேற்ப அட்டவணையை விரிவுபடுத்துக)

6 - 11 தரங்களில் குறித்த பாடங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் 40 புள்ளிகளுக்கும் அதிகம் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம். அட்டவணை 1.2.2.1

<table>
<tr><th rowspan="2"></th><th rowspan="2">பாடம்</th><th colspan="6">40 புள்ளிகளுக்கும் அதிகம் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம</th><th rowspan="2" colspan="2">சராசரி நூற்று வீதம்</th><th rowspan="2">புள்ளி</th></tr>
<tr><th>6</th><th>7</th><th>8</th><th>9</th><th>10</th><th>11</th></tr>
<tr><td>1.2.2.1</td><td>தாய்மொழி</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td colspan="2"></td><td></td></tr>
<tr><td>1.2.2.2</td><td>கணிதம்</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td colspan="2"></td><td></td></tr>
<tr><td>1.2.2.3</td><td>விஞ்ஞானம்</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td colspan="2"></td><td></td></tr>
<tr><td>1.2.2.4</td><td>ஆங்கிலம்</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td colspan="2"></td><td></td></tr>
<tr><td>1.2.2.5</td><td>வரலாறு</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td colspan="2"></td><td></td></tr>
<tr><td>1.2.2.6</td><td>சமயம்</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td colspan="2"></td><td></td></tr>
<tr><td rowspan="3">1.2.2.7</td><td>6 - 9 ற்கான ஏனைய பாடங்கள்:</td><td colspan="6"></td><td>சராசரி நூற்று வீதம்</td><td>சராசரி வீதம்</td><td></td></tr>
<tr><td>புவியியல்</td><td></td><td></td><td></td><td></td><td colspan="2" rowspan="2"></td><td></td><td rowspan="2"></td><td rowspan="2"></td></tr>
<tr><td>குடியுரிமைக்கல்வி</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

| | பாடம் | 40 புள்ளிகளுக்கும் அதிகம் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம | | | | | | சராசரி நூற்று வீதம் | | புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | | | |
| | இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) | | | | | | | | | |
| | சுகாதாரமும் உடற்கல்வியும் | | | | | | | | | |
| | செயன்முறை தொழில்நுட்ப திறன்கள் | | | | | | | | | |
| 1.2.2.8 | அழகியல் பாடங்கள்: | | | | | | | | | |
| | சித்திரம் | | | | | | | | | |
| | நடனம் | | | | | | | | | |
| | சங்கீதம் | | | | | | | | | |
| | நாடகமும் அரங்கியலும் | | | | | | | | | |
| | இலக்கிய நயம் அரபு /தமிழ் / ஆங்கில | | | | | | | | | |
| 1.2.2.9 | முதலாம் தொகுதிப் பாடங்கள்: | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| 1.2.2.10 | மூன்றாம் தொகுதிப் பாடங்கள்: | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

12-13 தரங்களின் குறித்த பாடத்துறைக்கேற்ப சகல பாடங்களிலும் 40 புள்ளிகளிலும் அதிகம் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம் - அட்டவணை 1.2.2.2

| | துறை | தரம் 12 இல் % | தரம் 13இல் % | சராசரிமூ | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1.2.2.11 | கலை | | | | |
| 1.2.2.12 | வர்த்தகம் | | | | |
| 1.2.2.13 | உயிரியல் விஞ்ஞானம் | | | | |
| 1.2.2.14 | பௌதிக விஞ்ஞானம் | | | | |
| 1.2.2.15 | தொழில்நுட்பம் | | | | |

1.2.3 பாடசாலைமட்ட கணிப்பீடுகளின் முன்னேற்றம்

முடிக்கப்பட்ட கணிப்பீடுகளின் நூற்று வீதம்

மாணவர் எண்ணிக்கை 90% உம் மேலும் - அதிசிறப்பு - 6 புள்ளி

மாணவர் எண்ணிக்கை 75% -89% வரை - மிக நன்று - 5 புள்ளி

மாணவர் எண்ணிக்கை 60% -74% வரை - நன்று - 4 புள்ளி

மாணவர் எண்ணிக்கை 45% -59% வரை - சாதாரணம். - 3 புள்ளி

மாணவர் எண்ணிக்கை 25% -44% வரை - அபிவிருத்தி அடைய வேண்டும். - 2 புள்ளி

மாணவர் எண்ணிக்கை 25% இற்குக் குறைவு - விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும். - 1 புள்ளி

1.2.3 வகுப்புக்களில் தவணைகளுக்கேற்ப பாடசாலைமட்டக் கணிப்பீடு முடிக்கப்பட்ட நூற்றுவீதம் அட்டவணை1.2.3.1

| | தரங்கள் | தரங்களிலுள்ள மொத்த வகுப்புக்களின் எண்ணிக்கை | உரிய தரங்க்ளில் கணிப்பீடு பூரணப்படுத்தப்பட் வகுப்புக்களின் எண்ணிக்கை | நூற்று வீதம் (மூ) | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1.2.3.1 | 6 - 9 | | | | |
| 1.2.3.2 | 10 - 11 | | | | |
| 1.2.3.3 | 12 - 13 | | | | |
| | | | | | |

1.2.4 அடைவு மட்ட பகுப்பாய்வு

ஒவ்வொரு சுட்டிகளுக்கும் உரிய நிலைமைகளை கருத்தில் கொண்டு கீழ்வரும் முறையில் புள்ளிகளை வழங்குக.

அதிசிறப்பு - 6 புள்ளிகள்
மிகநன்று - 5 புள்ளிகள்
நன்று - 4 புள்ளிகள்
சாதாரணம் - 3 புள்ளிகள்
அபிவிருத்தியடைய வேண்டும் - 2 புள்ளிகள்
விரைவாக அபிவிருத்தியடைய வேண்டும் - 1 புள்ளிகள்

| நியதிகள் | சுட்டிகள் | | புள்ளிகள் |
|---|---|---|---|
| பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்திற்கேற்ப அடைவு மட்டத்தினைப் பகுப்பாய்வு செய்தலும் அறிக்கைகளைப் பேணுதலும் | 1.2.4.1 | 6 -9 வகுப்புக்களில் பாடசாலை மட்ட கணிப்பீட்டுத்திட்டத்தினைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், புள்ளி அறிக்கைகளைப் பேணுதல், புள்ளிப் பகுப்பாய்வுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | |
| | 1.2.4.2 | 10 -11 வகுப்புக்களில் பாடசாலை மட்ட கணிப்பீட்டுத்திட்டத்தினைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், புள்ளி அறிக்கைகளைப் பேணுதல், புள்ளிப் பகுப்பாய்வுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல | |
| | 1.2.4.3 | 12-13 வகுப்புக்களில் பாடசாலை மட்ட கணிப்பீட்டுத்திட்டத்தினைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், புள்ளி அறிக்கைகளைப் பேணுதல், புள்ளிப் பகுப்பாய்வுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | |
| தவணைப் பரீட்சைக்குரிய அடைவு மட்டத்தினைப் பகுப்பாய்வு செய்தலும் அறிக்கைகளைப் பேணுதலும் | 1.2.4.4 | சகல வகுப்புக்களிலும் தவணைப் பரீட்சைப் புள்ளிகளை புள்ளிப்பதிவுப் புத்தகத்தில் பதிதலும் அதிபர் அதனை உறுதிப்படுத்தியிருத்தலும் | |
| | 1.2.4.5 | 6-9 வகுப்புக்களில் தவணைப் பரீட்சைப் புள்ளிகளின் பகுப்பாய்வுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டங்களை அல்லது செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியிருத்தல். | |
| | 1.2.4.6 | 10 -11 வகுப்புக்களில் தவணைப்பரீட்சைப் புள்ளிகளின் பகுப்பாய்வுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டங்களை அல்லது செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியிருத்தல். | |
| | 1.2.4.7 | 12 - 13 வகுப்புக்களில் தவணைப்பரீட்சைப் புள்ளிகளின் பகுப்பாய்வுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டங்களை அல்லது செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியிருத்தல். | |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ........................................................................................ ஒப்பம் : ................................................

திகதி : ..................................................

| | |
|---|---|
| தேசியமட்டப் பரீட்சை பெறுபேறுகள்<br><br>அட்டவனை 1.2.1 | இந்த நியதி தொடர்பாக புள்ளிகளை வழங்கும் போது மதிப்பீடு மேற்கொள்கின்ற தினத்தில் பாடசாலை பெற்றுக் கொண்ட இறுதி பரீட்சை பெறுபேற்று அட்டவணைக்கேற்ப புள்ளிகளை வழங்க வேண்டும்.<br><br>உயர்தரத்துக்கு தகுதி பெற்றவர்களின் சதவீதத்தினைக் கணிப்பிடும் போது க.பொ.த.சாதரணப் பரீட்சையில் தாய்மொழி, கணிதம் உட்பட 6 பாடம் (3 திறமைச்சித்திகளுடன்) சித்தியடைந்தோராகக் கருத வேண்டும். |
| தவணைப் பரீட்சைக் குரிய அடைவு மட்டத்தினைப் பகுப்பாய்வு செய்தலும் அறிக்கைகளைப் பேணுதலும்<br><br>அட்டவனை 1.2.2 | அந்தந்த வகுப்புக்களில் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் தோற்றிய முழு மாணவர்களில் 40 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம் கணிப்பிடப்பட வேண்டும்.<br>நூற்று வீதம் கிட்டிய முழு எண்ணில் பெறப்பட வேண்டும்.<br>மதிப்பீடு நடைபெறும் நாளுக்கு முன்னர் இறுதி தவணைக்குள் மேற்கொண்ட தவணைப்பரீட்சைப் புள்ளியை கவனத்தில் கொள்ள வேண்டும்.<br><br>உதாரணம்<br><br>6ம் வகுப்பில் சம பிரிவுகள் அனைத்திலும் சமய பாடத்திற்கு தோற்றியோரின் எண்ணிகை 100 ஆக உள்ள அதே வேளை அந்தப் பாடத்தில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் எண்ணிக்கை 70.<br>6ம் வகுப்பில் சமய பாடத்தில் 40 புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம் பின்வருமாறு:<br>70 /100 x 100 = 70<br>= 70%<br><br>இதன்படி 6 -11 வகுப்புக்களில் பிரதான பாடங்களில் (40) நாற்பதுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் நூற்றுவீதத்தைக் கணிப்பிட்டு உரிய வகுப்புக்களின் எண்ணிக்கையால் பிரித்துப் பெறப்படுகின்ற சராசரி நூற்று வீத ஈவு உரிய இடத்தில் குறிப்பிட்டு காட்டப்பட வேண்டும். அந்த நூற்று வீதம் தொடர்பாக உரிய புள்ளி உரிய இடத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.<br>உதாரணம்:<br>சமய பாடத்தில் நாற்பதுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் நூற்று வீதம்<br><br><table><tr><td>தரம்</td><td>6</td><td>7</td><td>8</td><td>9</td><td>10</td><td>11</td><td>சராசரி வீதம்</td><td>புள்ளி</td></tr><tr><td>%</td><td>70</td><td>80</td><td>90</td><td>60</td><td>75</td><td>85</td><td>77</td><td>5</td></tr></table><br>சமய பாடத்தில் புள்ளிகளுக்கு சராசரி நூற்று வீதம் கணித்தல்<br>(80+70+90+60+75+85)/6 = 460/6<br>=76.6 =77<br>அதற்கேற்ப சுட்டிக்கு கிடைக்கும் புள்ளி 5 ஆகும். சுட்டி 1.2.2.1 தொடக்கம் 1.2.2.6 வரையான விடயங்கள் தொடர்பாக மேற்கூறிய அடிப்படையில் சராசரி ஈவு கணிக்கப்பட்டு புள்ளி வழங்கப்பட வேண்டும்.<br><br>**6-9 வகுப்பக்களில் ஏனைய பாடங்கள் , அழகியல் பாடங்கள் மற்றும் 10- 11 வகுப்பு தொகுதிப் பாடங்கள் தொடர்பாக புள்ளி வழங்குதல்:**<br><br>பாடத்தொகுதி ஒரு சுட்டியாக கருதப்படும். இங்கு சகல பாடங்கள் தொடர்பாகவும் சாதாரண நூற்று வீதம் கணிக்கப்பட்டதன் பின் சராசரி நூற்று வீதம் கணிக்கப்பட வேண்டும். சராசரி நூற்று வீதத்துக்கிணங்கவே புள்ளி வழங்கப்பட்டிருக்க வேண்டும். சாதாரண நூற்று வீத ஈவின் கூட்டுத்தொகை பாட எண்ணிக்கையினால் பிரிக்கப்படும் போது தொகுதிக்குரிய சாதாரண நூற்று வீதம் பெறப்படும். |

உதாரணம்:

பாடசாலை ஒன்றில் 10 மற்றும் 11 வகுப்புக்களிலும் சகல சமாந்தர வகுப்புக்களில் உள்ள மாணவர்களில் 40 வீதத்துக்கு மேல் பெறப்பட்ட இரண்டாம் தொகுதிப் பாடங்கள் மூன்று தொடர்பான புள்ளிகளின் நூற்று வீதம் பின்வருமாறு. அதற்கிணங்க நூற்று வீதம் மற்றும் சராசரி நூற்று வீதம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| பாடம் | 10 ம் வகுப்பு | 11 ம் வகுப்பு | நூற்று வீதம் | சராசரி நூற்று வீதம் |
|---|---|---|---|---|
| | புள்ளிகளின் நூற்று வீதம் | புள்ளிகளின் நூற்று வீதம் | | |
| A | 60% | 75% | 68% | $\frac{68\% + 48\% + 73\%}{3}$ |
| B | 40% | 55% | 48% | = 63% |
| C | 80% | 65% | 73% | |

மேற்குறிப்பிட்ட அடிப்படையில் அழகியல் பாடம் மற்றும் தொகுதிப்பாடங்கள் தொடர்பில் சராசரி நூற்றுவீதம் கணிக்கப்பட்டு இலக்கம் 1.2.2.7, 1.2.2.10 தொடர்பாக புள்ளிகள் இடப்பட வேண்டும்.

அட்டவணை 1.2.2.2

**12 - 13 வகுப்புக்களுக்குப் புள்ளி வழங்குதல்.**

அந்தந்த பாடத்துறைகளுக்கமைய முழு மாணவர் தொகையில் தவணைப்பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் சதவீதம் கணிப்பிடப்பட வேண்டும்.

உதாரணம்:

பாடசாலையில் 12ம் வகுப்பின் கலைப்பிரிவுக்குரிய மொத்த மாணவர் எண்ணிக்கை 200 ஆகும். பாடங்கள் மூன்றிலும் 40 மேல் பெற்ற மாணவர் எண்ணிக்கை 150 ஆகும். குறித்த பாடத்துறையில் தரம் 13 மாணவர் எண்ணிக்கை 180 ஆக உள்ள அதே வேளை பாடங்கள் மூன்றிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் எண்ணிக்கை 155 ஆகும்.

அதற்கிணங்க 12ம் வகுப்பில் 40 புள்ளிகளுக்கு மேல் மூன்று பாடங்களிலும் பெற்ற மாணவர் வீதம் = 150/200 x 100 = 75 %

12 மற்றும் 13 வகுப்புகள் இரண்டிலும் மேற்கூறிய அடிப்படையில் செய்து குறிப்பிட்ட ஈவினை இரண்டால் பிரித்து அந்தந்த பாடத்துறைக்குரிய சாதாரண ஈவு கணிக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டக் கணிப்பீடு

அட்டவணை 1.2.3

மதிப்பீடு செய்யும் நாளுக்கு முன்னுள்ள இறுதி தவணையில் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் உரிய பாடசாலை மட்டக் கணிப்பீடுகளின் மொத்த எண்ணிக்கை, பூரணப்படுத்திய வகுப்புக்களின் எண்ணிக்கை என்பன இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அதற்கிணங்க ஒவ்வொரு பாடங்கள் தொடர்பிலும் உரிய பாடசாலை மட்டக் கணிப்பீடு முடிக்கப்பட்டுள்ள வகுப்புக்களின் நூற்று வீதம் கணிப்பிடப்பட வேண்டும்

உதாரணம்:

தரம் 6- 9 வகுப்புக்களின் எண்ணிக்கையும் சகல பாடங்கள் சம்பந்தமாக 2014 இரண்டாம் தவணை பாடசாலை மட்ட கணிப்பீடு முழுமையாக நடைபெற்ற வகுப்புக்களின் எண்ணிகசை கீழே காட்டப்படுகின்றது.

| தரம் | 6 | 7 | 8 | 9 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சமாந்தர வகுப்பக்களின் எண்ணிக்கை | 3 | 3 | 3 | 3 | 12 |
| சுகல பாடங்களிலும் பாடசாலை மட்ட கணிப்பீடு பூரணபடுத்ப்ட்டுள்ள வகுப்புக்களின் எண்ணிக்கை (இரண்டாம் தவணை) | 1 | 2 | 2 | 3 | 8 |

இரண்டாம் தவணைக்குரிய சகல பாடத்திற்குமான பாடசாலை மட்ட கணிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ள வகுப்பக்களின் சதவீதம் (6-9 தரம்) = 8/12 x 100= 66.7%

இதற்கமைய சகல பாடங்கள் தொடர்பிலும் மேற்கூறியவாறு கணிக்க முடியும்.

# 2. கற்றல் கற்பித்தலும் மதிப்பீடும்



| பண்புத்தரம் | தேவைப்பாடுகள் | நியதிகள் |
|---|---|---|
| தனிநபர் மற்றும் சமூக விருத்தியை இலக்காகக் கொண்ட முறைமையானதும் திட்டமிடப்பட்டதுமான கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் செயற்படுத்துதல். | திட்டமிடப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனுடன் செயற்படுத்தல் | முறையான பாடத்திட்டமிடலும் சிறப்பான பாடப் பிரவேசமும் |
| மாணவர்களின் பண்புத்தர விருத்திக்கு உதவும் வகையில் பல்தரப்பட்ட கற்றல் ஊடகமும், உபகரணங்களும், செயற்பாடுகளும் பயன்படுத்தப்படல் | சந்தர்பத்திற்கேற்றவாறு புதுப்பிப்பதனூடாக மகிழ்ச்சிகரமான வினைத்திறனுடைய கற்றல் சூழல் ஒன்றை உருவாக்குதல் | உயர் மட்டத்திலான பாடவிருத்தி |
| | தேர்ச்சியை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் மாணவர்களுக்கு உதவுதல | உயர்தரமான மதிப்பீடு |
| | மாணவர் மையக் கற்றல் முறையொன்றை செயற்படுத்தல் | தனிநபர் பொறுப்பும் ஆளுமையும். உயர் மட்டத்திலான பாடவிருத்தி |
| | எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கான பல்வேறு மதிப்பீட்டு முறைகளை பயன்படுத்துதல். | |

மதிப்பீட்டுப் படிவம் 02

# கற்றல் கற்பித்தல் மதிப்பீடு (1 தொடக்கம் தரம் 13 வரை)

பாடசாலையின் பெயர்: ...................................................................................

இம்மதிப்பீட்டுப் படிவத்தை நான்கு ஆசிரியர்களின் மதிப்பீட்டிற்குப் பாவிக்கவும்

1. ஆசிரியரின் பெயர் - .................................... பாடம் - ...................... வகுப்பு - ................... பாடவேளை - ................
2. ஆசிரியரின் பெயர் - .................................... பாடம் - ...................... வகுப்பு - ................... பாடவேளை - ................
3. ஆசிரியரின் பெயர் - .................................... பாடம் - ...................... வகுப்பு - ................... பாடவேளை - ................
4. ஆசிரியரின் பெயர் - .................................... பாடம் - ...................... வகுப்பு - ................... பாடவேளை - ................

புள்ளி வழங்குதல் - ஒவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | |
|---|---|---|---|
| அதிவிசேடம் | - 6 புள்ளிகள் | சாதாரணம் | - 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - 2 புள்ளிகள் |
| நன்று | - 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டிகள் | | புள்ளிகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆ 1 | ஆ 2 | ஆ 3 | ஆ 4 |
| 2.1 முறையான பாடத்திட்டமிடலும் சிறப்பான பாடப் பிரவேசமும | 2.1.1 | பாடக்கொள்கை வருடாந்த/ தவணை/ வராந்த/ தினசரி வேலைத்திட்டத்தை தயாரித்து அனுமதி பெற்று வைத்திருத்தல். | | | | |
| | 2.1.2 | அத்திட்டத்தில் பாடத்துக்குரிய நோக்கம் மற்றும் தேர்ச்சிகளை விளக்கமாகக் காட்டியிருத்தல். | | | | |
| | 2.1.3 | விடய உள்ளடக்கத்தின் பிழையற்ற தன்மையும் போதுமான அளவும். | | | | |
| | 2.1.4 | மாணவரின் பல்வகைத்தன்மை மற்றும் கற்றல் பாங்கு தொடர்பில் அவதானம் செலுத்தி பல்வேறு கற்றல் முறைகளையும் உபாயங்களையும் உள்ளடக்கியிருத்தல். | | | | |
| | 2.1.5 | பொருத்தமான கற்பித்தல் உபகரணங்கள்,மாணவர்களுக்குப் பொருத்தமான சிறந்த கற்றல் சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியிருத்தல். | | | | |
| | 2.1.6 | மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்தியிருப்பதோடு கற்றல் கற்பித்தல் வளங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தியிருத்தல். | | | | |
| | 2.1.7 | கற்றல் அனுபவங்களை நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தும் வகையில் கவனம் செலுத்தியிருத்தல். | | | | |
| | 2.1.8 | செயற்பாடுகளை உள்ளடக்கிய கற்றல் கற்பித்தல் செயல்முறையை தயார்ப்படுத்தி வைத்திருத்தல். | | | | |
| | 2.1.9 | மனதைக்கவரும் வகையில் பாடத்தினை ஆரம்பித்தல். | | | | |
| 2.2. உயர் மட்டத்திலான பாடவிருத்தி | 2.2.1 | திடடத்திற்கமைய படிப்படியாக பாடம் விருத்தி செய்யப்படுகின்றது. | | | | |
| | 2.2.2 | பாடநூலுக்கு மேலதிகமாக பாடத்துக்கு பொருந்தும் வகையில் ஒப்படைகள்/ செயற்பாடுகள்/ வளங்கள் மற்றும் கற்றல் துணைச்சாதனங்களை வினைத்திறனுடன் உச்ச அளவில் பயன்படுத்தியிருத்தல். | | | | |
| | 2.2.3 | மாணவர்களைத் தர்க்கரீதியில் தொழிற்பட ஊக்குவித்தல்/ ஈடுபடுத்துதல் மற்றும் வினாக்களைத் தொடுப்பதற்கு மாணவர்களை தூண்டுதல். | | | | |
| | 2.2.4 | மாணவர்களின் வெவ்வேறு அறிவு மட்டங்களுக்கு பொருந்தும் வகையில் உதாரணங்களையும் நோக்கத்துடன் கூடிய வினாக்களையும் ஒப்படைகளையும் முன்வைத்தல். | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2.2.5 | மாணவர் செயற்பாட்டு கற்றற் பாங்கைப் பின்பற்றி மாணவர்களின் வெளிப்பாடுகளைப் பெற்று பாடத்தை விருத்தி செய்தல். | | | | |
| | 2.2.6 | மாணவர் - மாணவர், மாணவர் - ஆசிரியர் இடைத்தொடர்புகள் ஏற்படும் வகையில் குழுச்செயற்பாடுகள் மூலம் கற்றலை நெறிப்படுத்துதல். | | | | |
| | 2.2.7 | வேறுபட்ட திறன்கள், ஆக்கத்திறன் என்பன விருத்தியாகும் வகையில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல். | | | | |
| | 2.2.8 | சுயகற்றலுக்கு ஈடுபடுத்துலும் தேவையான உதவிகளை வழங்கலும். | | | | |
| | 2.2.9 | யதார்த்த வாழ்க்கை அனுபவங்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் பாடத்தினை பொருத்தப்பாடடையச்செய்தல். | | | | |
| 2.3 மதிப்பிடல் | 2.3.1 | வெளிப்பாடுகளை முன்வைத்தலுக்கு சந்தரப்பம் வழங்குதலும் ஊக்குவித்தலும் சரிசெய்தலும் | | | | |
| | 2.3.2 | பாட முடிவில் கற்ற விடயங்களின் சாராம்சத்தை மீள வலியுறுத்தி உறுதிப்படுத்துதல். | | | | |
| | 2.3.3 | பொருத்தமான மதிப்பீடு/ அளவீட்டு முறையை பாவித்தலும் அதனூடாக மாணவர்களின் பலத்தையும (strength); அபிவிருத்திக்கான சந்தர்பங்களையும் இனங்காணுதல். | | | | |
| | 2.3.4 | முன்னூட்டல்,பின்னூட்டலினை மேற்கொள்ளல் | | | | |
| 2.4.தனிநபர் பொறுப்பும் ஆளுமையும் | 2.4.1 | மாணவர்களுடனும் ஏனைய ஆளணியினருடனும் பொருத்தமான இடைத்தொடர்புகளை பேணுவதோடு பாடசாலையின் ஏனைய செயற்பாடுகளுக்கு சிறந்த பங்களிப்பினை வழங்குதல். | | | | |
| | 2.4.2 | குறைவாக லீவு எடுத்தலும் அவ்வாறு லீவு பெறும் சந்தரப்பங்களில் ஒப்படைகளையும் செயற்பாடுகளையும் மாணவர்களுக்கு வழங்கியிருத்தலும். | | | | |
| | 2.4.3 | உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு சமூகமளித்தல், உரிய நேரத்தில் வகுப்பறைக்கு சமூகமளித்தல் மற்றும் வகுப்பறைப் பாடப் பதிவேட்டில் உரியவாறு பதிவுகளைப் பேணுதல். | | | | |
| | 2.4.4 | சிறந்த ஆளுமையும் தன்னம்பிக்கையும் கொண்டிருத்தல். | | | | |
| | 2.4.5 | பாடசாலை மட்டக் கணிப்பீடு / அளவீடு (ஆரம்பநிலை) உரியவாறு முடிவுறுத்துதல், பகுப்பாய்வு செய்தல், பரிகார வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுதல். | | | | |
| | 2.4.6 | உரிய காலத்தில் பாடத்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்காகச் செயற்படுதல். | | | | |
| | 2.4.7 | மாணவர் பயிற்சிகளின் பிழையற்ற தன்மையைப் பரிசீலித்தலும் தேவையான ஆலோசனைகளை உரியவாறு வழங்குதலும். | | | | |
| | 2.4.8 | பயிற்சிக் கருத்தரங்குகளுக்கு சமூகமளித்தலும் தொழில்சார் அறிவினை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலும். | | | | |
| மொத்த புள்ளிகள் | | | | | | |

❖ தனிநபர் பொறுப்பும் ஆளுமையும் விடயத்திற்கு உரிய புள்ளியிடும் போது அதிபர் அல்லது முகாமைத்துவ குழுவுடன் கலந்துரையாடி உரிய கோவைகளை பரீசிலித்தலும் பொருத்தமாகும்.

| | ஆசிரியர் 1 | ஆசிரியர் 2 | ஆசிரியர் 3 | ஆசிரியர் 4 |
|---|---|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | | | | |
| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய உச்சப் புள்ளிகள் | | | | |
| பெறப்பட்ட புள்ளிகள் | | | | |
| புள்ளிகளின் சதவீதம் | | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ........................................................................................... ஒப்பம் : ..............................................

திகதி : ..................................................

# 3. முறையான கலைத்திட்ட முகாமைத்துவம்

## பண்புத்தரம்

தேசிய கலைத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கத்தையும் தேர்ச்சிகளையும் சகல மாணவர்களும் அடையக் கூடிய விதமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் தயாரிக்கப்படுதல்

## தேவைப்பாடுகள்

தேசிய நோக்கத்தையும் அடிப்படைத் தேர்ச்சிகளையும், பாடத்திறன்களையும் உறுதிப்படுத்தும் வகையில் திட்டமிட்ட கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

மாணவர் தேர்ச்சிகளை பெற்றுக்கொள்ளும் விதத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

கற்றல் கற்பித்தல் விருத்திக்கு உதவும் பல்வேறு கற்றல் ஊடகங்கள், உபகரணங்கள், வளங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பனவற்றை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தல்

## நியதிகள்

தேசிய கல்வி நோக்கங்கள், அடிப்படைத் தேர்ச்சிகளை அடையக்கூடியதாக கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கேற்ப பாடஅமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்படுதல்

ஆரம்பப்பிரிவு கற்றல் - கற்பித்தல் செயன்முறை சிறப்பாக செயற்படுத்தப்படுதல்

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் முறையாக மேற்கொள்ளல்

கற்றல் சூழலிற்காக பௌதீக வளங்களை வினைத்திறன் உள்ளதாக பயன்படுத்தல்

விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளுக்கு உச்ச வசதிகளை செய்து கொடுத்தல்.

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டம், பாடநூல் என்பவற்றை முறையாகப் பங்கீடு செய்தலும் பயனுள்ள முறையில் பாவித்தலும்.

வகுப்புப் பாடப்பதிவுப் புத்தகம் முறையாகப் பேணப்படுதல்.

மாணவர் தேர்ச்சி விருத்திக்கான செயற்றிட்டங்கள்.



# முறையான கலைத்திட்ட முகாமைத்துவம்

புள்ளி வழங்குதல் - ஒவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | |
|---|---|---|---|
| அதிவிசேடம் | - 6 புள்ளிகள் | சாதாரணம் | - 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - 2 புள்ளிகள் |
| நன்று | - 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டிகள் | புள்ளி |
|---|---|---|
| 3.1 தேசிய கல்வி நோக்கங்கள், அடிப்படைத் தேர்ச்சிகளை அடையக்கூடியதாக கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கேற்ப பாடஅமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்படுதல் | 3.1.1 தேசிய கல்விக் குறிக்கோள்களையும் அடிப்படை தேர்ச்சிகளையும் காட்சிப்படுத்தல். தேசிய கல்விக் குறிக்கோள்கள்/அடிப்படைத் தேர்சிகள் தொடர்பாக பாடசாலை சமூகத்திற்கு விழிப்பூட்டல். | |
| | 3.1.2 தேசிய கல்விக் குறிக்கோள்கள் / அடிப்படைத் தேர்ச்சிகளை அடைவதை உறுதிசெய்யக்கூடியவாறு வருடாந்த செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 3.2 ஆரம்பப்பிரிவு கற்றல் - கற்பித்தல் செயன்முறை சிறப்பாக செயற்படுத்தப்படுதல் | 3.2.1 ஒரு முதன்மை நிலைக்கான வகை கூறலை ஒரு ஆசிரியருக்கே வழங்கி முன்னேற்றத்தை கண்காணித்தல். | |
| | 3.2.2 சுற்று நிருபத்திற்கேற்ப 1ஆம் 2ஆம் 3ஆம் முதன்மை நிலைகளுக்காக திட்டமிடப்பட்டுள்ள விளையாட்டுச் செயற்பாடுகள், விளையாட்டு முற்றம், ஆக்கச்செயற்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப் படுத்துவதுடன் உச்சப்பயன்பாட்டைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல். | |
| | 3.2.3 முன்மொழித்தேர்ச்சி, முற்கணித தேர்ச்சிகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி ஆங்கிலம் / சிங்களம் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல் | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 3.3 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் மற்றும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் முறையாக மேற்கொள்ளல் | 3.3.1 தரம் 1, தரம் 3 மாணவர்களை அறிதல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் ஒவ்வொரு மாணவர் தொடர்பாகவும் இற்றைப்படுத்தப்பட்ட அறிக்கைகள் குறிப்புக்களைப் பேணுதல். | |
| | 3.3.2 மாணவர்களை அறிதல் செயற்பாடுகள் ஊடாக அறியப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை திட்டமிடல். | |
| | 3.3.3 கணிப்பீட்டு அறிக்கைப் பகுப்பாய்வு முடிவுகளுக்கேற்ப பின்னூட்டல் வேலைத்திட்டம் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் | |
| | 3.3.4 ஒரு முதன்மை நிலையில் உள்ள அத்தயாவசிய கற்றல் தேர்ச்சி அறிக்கைகளை மற்றைய முதன்மை நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு கையளிக்கும் போது ஆசிரியர்களைத் தெளிவுபடுத்துவதுடன் அதனைக் கண்காணிக்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 3.4 கற்றல் சூழலிற்காக பௌதீக வளங்களை வினைத்திறன் உள்ளதாக பயன்படுத்தல் | 3.4.1 சுவர்ப்பத்திரிகை / மாணவர் ஆக்கங்களை காட்சிப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலும் அவற்றை இற்றைப்படுத்தலும். | |
| | 3.4.2 வகுப்பறையில் உள்ள படைப்புக்கள் / உபகரணங்கள் / ஒப்படைகளை பாதுகாப்பாக வைத்திருத்தலும் அவற்றை இற்றைப்படுத்தலும் | |
| | 3.4.3 வகுப்பறையில் விசேடமான இடங்களை திட்டமிட்டு பயன்படுத்தலும் அவற்றிற்கான வளங்களை இலகுவாகப் பெறக்கூடிய வகையில் இருத்தலும் (செயற்பாட்டுமேசை, புத்தக மூலை, வகுப்பறை நூலகம்....). | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |

| | | |
|---|---|---|
| 3.5 விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளுக்கு உச்ச வசதிகளை செய்து கொடுத்தல். | 3.5.1 விசேட கல்வித்தேவையுடைய சகல பிள்ளைகளையும் இனம் காண்பதுடன் அவர்களுக்கான வினைத்திறன்மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல். | |
| | 3.5.2 உட்படுத்தற்கல்வி வேலைத்திட்டம் ஒன்று காணப்படின் இம்மாணவர்களுக்கு ஏற்றவாறு கற்றல் கற்பித்தல் செயற்திட்டங்களை அமுலப்படுத்தி முன்னேற்ற அறிக்கைகளைப் பேணல். | |
| | 3.5.3 விசேட கல்வி அலகு காணப்படின் அவ்வலகுக்கான அணுகுவழிகளை, தேவையான வளங்களை வழங்கி மனங்கவரும் விதத்தில் பேணுதல். | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 3.6 ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டம், பாடநூல் என்பவற்றை முறையா-கப் பங்கீடு செய்தலும் பயனுள்ள முறையில் பாவித்தலும். | 3.6.1 ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டம், பாடநூல்கள் தொடர்பான பொறுப்பினை உரிய ஆசிரியருக்கு வழங்கலும் அவற்றின் தேவைகளை இனங்கண்டு அவற்றை முற்றாகப் பெற்று பதிவு செய்து தேவைக்கேற்ப விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் கண்காணித்தலும். | |
| | 3.6.2 பாடசாலையில் ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டம், பாடநூல்கள் போன்றவற்றை பதிந்து வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல், தேவை ஏற்படுகையில் மீளப்பெற்றுக்கொள்ளல், தேவையேற்படின் மீள வழங்குவதற்கான நடைமுறையை உருவாக்குதல். | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 3.7 வகுப்புப் பாடப் பதிவுப் புத்தகம் (Record Book) முறையாகப் பேணப்படுதல். | 3.7.1 சகல வகுப்புகளினதும் வகுப்பறைப் பதிவேடுகளில் அடிப்படைத் தகவல்களை பூரணப்படுத்துதல், இற்றைப்படுத்துதல் | |
| | 3.7.2 பாட வேளை முடிவில் தினமும் பாடப்பதிவு, ஆசிரியரால் பதிவுசெய்யப்படுகின்றதா என்பதை தொடர்ச்சியாகக் கண்காணித்தல். | |
| | 3.7.3 நாளாந்த, வாராந்த, தவணைக்கான கற்றல் கற்பித்தல் சுருக்க அறிக்கை தயாரித்து அதனைப்பகுப்பாய்வு செய்வதன் ஊடாக பின்னூட்டல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல். | |
| | 3.7.4 ஆசிரியர்கள் வராத பாடவேளைகளில் அவர்களின் வகுப்புகளுக்கு பொருத்தமான மாற்று வேலைத்திட்டங்களை வழங்குதல் (ஒப்படை வங்கி, வாசிப்புப் பயிற்சி.....). | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 3.8 மாணவர் தேர்ச்சி விருத்திக்கான செயற்றிட்டங்கள். | 3.8.1 மாணவர் தேர்ச்சி தொடர்பான செயற்றிட்டங்களைத் திட்டமிடலும் நடைமுறைப்படுத்துதலும். | |
| | 3.8.2 6-11 வரையான தரங்களில் உள்ள சகல மாணவர்களும் பங்கேற்கக் கூடிய வகையில் செயற்றிட்டங்களை ஒழுங்கு படுத்தி கண்காணித்தல். | |
| | 3.8.3 அனைத்து உயர்தர மாணவர்களுக்கான பல்வகைப்பட்ட செயற்றிட்டங்களை செயற்படுத்தி வழிப்படுத்தலும் ஆசிரியரூடாக அவற்றை கண்காணித்தலும். | |
| | 3.8.4 செயற்றிட்ட அறிக்கையினை முறையாகப்பேணி ஏனைய மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்ததுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் (Enlgish as a life skill......) | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ........................................................................................ ஒப்பம் : ................................................

திகதி : .................................................

# 4. இணைப் பாடவிதான வேலைத்திட்டம்

## பண்புத்தரம்

மாணவர்களின் சமநிலை ஆளுமை, ஆற்றல், அந்நியோன்னியம், ஒத்துழைப்பு, விழுமியங்கள் மற்றும் ஆக்கத்திறன்களை விருத்தி செய்யும் வகையில் இணை பாடவிதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல்

## தேவைப்பாடுகள்

- இணை பாடவிதான செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்துதல்.
- பல்வேறு வேலைத்திட்டங்களின் மூலம் மாணவர்களின் ஆற்றல்களையும் ஆக்கத்திறன்களையும் விருத்தி செய்தல்
- இணை பாட விதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களிடையே விழுமியங்கள் மற்றும் நற்பண்புடைய தன்மைகளை விருத்தி செய்தல்.

## நியதிகள்

- முறையான இணை பாடவிதான செயற்பாடுகள்
- ஆரம்பப்பிரிவு இணை பாடவிதான செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துதல்
- மாணவர்களின் உடல்விருத்தித்திக்கு பொருத்தமான செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல்
- மாணவர்களின் ஆற்றல், ஆக்கத்திறன், ஆளுமை விருத்தி என்பவற்றிற்கு நடவடிக்கை எடுத்தல்
- மாணவர்களுக்கு ஒழுக்க, விழுமிய விருத்தியில் அவதானம் செலுத்துதல்



மதிப்பீட்டுப் படிவம் 04

# இணைப் பாட விதான செயற்பாடுகள்

புள்ளி வழங்குதல் - ஒவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | |
|---|---|---|---|
| அதிவிசேடம் | - 6 புள்ளிகள் | சாதாரணம் | - 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - 2 புள்ளிகள் |
| நன்று | - 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 4.1 முறையான இணை பாடவிதான செயற்பாடுகள் | 4.1.1 பல்வேறு திறன் விருத்தி, இரசனைகளுக்கும் கலாசாரங்களுக்கும் ஏற்ப செயற்றிட்டங்களையும் உட்படுத்திய இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த திட்டம் மற்றும் பாடசாலை நாட்காட்டி ஆகியவற்றைத் தயாரித்துத் செயற்படுத்தலும் கண்காணித்தலும். | |
| | 4.1.2 சகல ஆசிரியர்களுக்கும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருத்தல் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு கொள்ளும் மாணவர் தொடர்பில் மேலதிக கவனம் செலுத்துதல். | |
| | நியதிகளுக்கான மொத்தப்புள்ளி | |
| 4.2 ஆரம்பப்பிரிவு இணை பாடவிதான செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்துதல் | 4.2.1 சகல மாணவர் தொடர்பிலும் போதிய அவதானம் செலுத்தி ஆரம்பப் பிரிவின் இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பான திட்டத்தை தயாரித்தல் | |
| | 4.2.2 ஆரம்பப் பிரிவுக்குரிய இணைப்பாடவிதான செயற்பாடுகள் / செயற்றிட்டங்களை செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பினை மேற்கொள்ளல் | |
| | 4.2.3 ஓவ்வொரு முதன்மை நிலைக்குமுரிய உடற்பயிற்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்தலும் அதற்காக மாணவர்களை ஈடுபடுத்தலும் | |
| | 4.2.4 முதன்மைநிலை மூன்று தொடர்பாக வெவ்வேறு விருப்பத்துக்குரிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 4.3 மாணவர்களின் உடல்விருத்தித்திக்கு பொருத்தமான செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல் | 4.3.1 ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பில் மாணவர்களை தெரிவு செய்ய முறையானதும் விதிமுறைகளுக்கமைவானதுமான நடைமுறையைப் பின்பற்றுதல். மாணவர்களின் ஆற்றல், விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறு விளையாட்டுக்களில் பங்குபற்ற வாய்புகளை வழங்குதல் | |
| | 4.3.2 போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்ற முன்னர் உடற்தகுதி பரிசோதனை செய்திருத்தல். ஓவ்வொரு போட்டிக்குமுரிய உடற்பயிற்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்தலும் அதற்காக மாணவர்களை ஈடுபடுத்தலும் | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 4.4 மாணவர்களின் ஆற்றல், ஆக்கத்திறன், ஆளுமை விருத்தி என்பவற்றிற்கு நடவடிக்கை எடுத்தல் | 4.4.1 போட்டிகள், அழகியல் வேலைத்திட்டங்கள், கண்காட்சிகள், விவாதம் மற்றும் மொழி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | |
| | 4.4.2 வெவ்வேறு மன்றங்களை செயற்படுத்துதலும் ஆக்கத்திறனிற்குரிய சந்தர்ப்பங்களுக்கு மாணவர்களை இட்டுச் செல்லுதலும் (புதிய கண்டுபிடிப்பு, சஞ்சிகைகள், செய்திப்பத்திரிகைகள், சமூக சேவை வேலைத்திட்டங்கள்) | |
| | 4.4.3 சாரணியம் ,சுகாதார சேவை, முதலுதவி, சுற்றாடல் படை, செஞ்சிலுவை, சென் ஜோன் அம்புலன்ஸ் படையணி மற்றும் மாணவர் படையணி போன்ற துணைச்சேவைகள் நடைமுறப்படுத்தல் | |
| | 4.4.4 ஒவ்வொரு வேலைத்திட்டம் மற்றும் விசேட வெற்றிகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட கோவைகள் (அறிக்கை, செய்தி, அட்டவணை, புகைப்படங்கள், வீடியோ ) பேணுதல் | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |

| | | |
|---|---|---|
| 4.5 மாணவா்களுக்கு ஒழுக்க, விழுமிய விருத்தியில் அவதானம் செலுத்துதல் | 4.5.1 மாணவர்களின் ஒழுக்கநெறிகள், விழுமியங்கள், கலாசாரங்கள் மற்றும் சமயம் தொடர்பான வேலைத் திட்டங்களை செயற்படுத்துதல். | |
| | 4.5.2 தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்யும் வகையிலும் வேலைத் திட்டங்களை நடத்துதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| மொத்த புள்ளிகள் | | |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ............................................................................................ ஒப்பம் : .................................................

திகதி : ..................................................

# 5. மாணவர் நலன்புரி



## பண்புத்தரம்

பல்வேறு நலன்புரி வேலைத்திட்டத்தின் ஊடாக மாணவர்களின் உடல உள விருத்தியைப் பலப்படுத்தல்.

## தேவைப்பாடுகள்

- வினைத்திறன் மற்றும் விளைதிறனாக மாணவர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- நலன்புரிச்சேவைகள் மூலம் மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- மாணவர் ஆரோக்கியம் மற்றும் போசணை நிலமை-களை விருத்தி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல
- மாணவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

## நியதிகள்

- முறையான மற்றும் திட்டமிடப்பட்ட மாணவர் ஆலோசனை வழிகாட்டல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலைகளில் மாணவர் வரவு
- முறையான திட்டமிடப்பட்ட தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்
- சமூகப் பொருளாதார பிரச்சினை உள்ள பிள்ளைகளுக்கான உதவித்திட்டங்கள் மேற்கொள்ளல்
- மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்
- மாணவரகளின் சுகாதாரத் தேவைகளை உறுதிப்படுத்தல்.
- மாணவர் சுகாதாரம் மற்றும் போசணை மட்டத்தை இனம் காணல்
- மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- சிற்றுண்டிச்சாலையை சிறந்த முறையில் பேணுதல்
- இடர்முகாமைத்துவச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளல்

மதிப்பீட்டுப் படிவம் 05

## மாணவர் நலன்புரி

புள்ளி வழங்குதல் - ஒவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிவிசேடம் | - | 6 புள்ளிகள் | சாதாரணம் | - | 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - | 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - | 2 புள்ளிகள் |
| நன்று | - | 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - | 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டி | புள்ளி |
|---|---|---|
| 5.1 முறையான மற்றும் திட்டமிடப்பட்ட மாணவர் ஆலோசனை வழிகாட்டல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல். | 5.1.1 மாணவர் ஆலோசனை வழிகாட்டல் வேலைத்திட்டம் சம்மந்தமாக சுற்றுநிருபத்திற்கமைவாக பொருத்தமான ஆசிரியருக்கு பொறுப்புக்களை வழங்குவதுடன் பாடசாலையில் வழிகாட்டல் வேலைத்திட்டங்களை நடத்துதலும் அதனைப் பாடசாலைச் சமூகத்திற்கு அறிவுறுத்துதலும். | |
| | 5.1.2 மாணவர் பிரச்சனைகளை இனங்காண்பதற்குத் தெளிவான வழிமுறைகளை எடுத்தலும், அவற்றைக் கலந்துரையாடுவதற்கான பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தலும். | |
| | 5.1.3 வழிகாட்டல் ஆலோசகரிடம் அனுப்பி பிள்ளையின் பிரச்சினைக்கான தீர்வு பெறப்பட்டுள்ளமை தொடர்பான அறிக்கை பேணப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.2 பாடசாலைகளில் மாணவர் வரவு | 5.2.1 நேரம் பிந்தி வரும் மாணவர்களை இனம் காணலும் அடிக்கடி பிந்தி வரும் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பெற்றோருக்கு அறிவுறுத்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல். | |
| | 5.2.2. சகல பிள்ளைகளும் பாடசாலைக்குப் வந்து திரும்பும் முறையை அறிந்திருத்தலும், பிள்ளைகள் பாடசாலைக்கு வரும்போதும் திரும்பிச் செல்லும்போதும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இடையூறுகள் சம்பந்தமாக தகவல் கிடைக்கையில் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.3 முறையான திட்டமிடப்பட்ட தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் | 5.3.1 தொழில் பயிற்சிக் கற்கைநெறி நிலையங்கள் சம்பந்தமான விபரங்கள் சேகரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுவதுடன் தேவைப்படும்போது வளவாளர்களின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல். | |
| | 5.3.2 இடைநிலை பாடசாலை மாணவர்களின் விருப்புக்களையும் திறன்களையும் இனங்கண்டு பாடசாலையை விட்டுச் செல்லும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு தொழிற்பயிற்சி நெறிகள் தொடர்பாக அறிவூட்டுவதுடன் மாணவர்களை தொழிற்பயிற்சி நெறிகள் தொடர்பில் வழிப்படுத்தலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.4 சமூகப் பொருளா-தார பிரச்சினை உள்ள பிள்ளைகளுக்கான உதவித்திட்டங்கள் மேற்கொள்ளல் | 5.4.1 சமூக, பொருளாதார பிரச்சினையை எதிர்கொள்ளும் மாணவர்களை இனங்காணுதலும் அவ்வாறான மாணவர்களுக்கு சலுகை வழங்க பாடசாலை மட்டத்தில் பொருத்தமான வேலைத்திடடம் / செயற்றிட்டம் தயாரித்தல். | |
| | 5.4.2 அவ்வாறான மாணவர்களுக்கு உதவி வழங்கக்கூடிய கொடையாளிகளை இனங்காணல், அவரகளிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.5 மாணவர் சுகாதாரம் மற்றும் போசணை மட்டத்தை இனம் காணல். | 5.5.1 பாடசாலை சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டச் செயற்பாடுகள் நடைபெறுதல். தனிநபர் சுகாதாரம் நற்பழக்கவழக்கம் சம்பந்தமாக தேவையான அறிவூட்டலை வழங்கல். (பாடசாலை வைத்தியப் பரிசோதனைகள், முதலுதவி அலகு) | |
| | 5.5.2 போசாக்கு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் இது தொடர்பாக அவசியமாக பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பாக அறிவுறுத்துதலும் | |
| | 5.5.3 புகை, போதைப் பாவனையின் தீமைகள் பற்றி அறிவுறுத்துதல் மற்றும் தடுத்தல் தொடர்பாக வேலைத்திட்டங்களை ஏற்படுத்துதல் | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |

| | | |
|---|---|---|
| 5.6 மாணவரகளின் சுகாதாரத் தேவைகளை உறுதிப்படுத்தல். | 5.6.1 மாணவர், ஆசிரியர் எண்ணிக்கைக்கு ஏற்ப மலசல கூடங்கள் அமைத்தல். அவற்றைத் தினமும் சத்திகரிப்பு செய்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டம் இருத்தல். | |
| | 5.6.2 பாடசாலைக்குள் குப்பை கூழங்களை உரிய முறையில் அகற்றும் வசதிகளும் அவற்றைப் பயனுள்ள வழியில் பயன்படுத்தும் வழிமுறைகளும் காணப்படுதல். | |
| | 5.6.3 ஈ, நுளம்பு, தொற்று நோய்கள் பரவுதலை தடுக்கும் வழிமுறைகளையும் நடைமுறைகளையும் எடுத்து இது சம்பந்தமாக அறிவுறுத்தலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.7 மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் | 5.7.1 சுற்றறிக்கைப்படி சிறுவர் பாதுகாப்புக்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் அதற்கு இணைப்பாளராக ஆசிரியர் ஒருவரை நியமித்தலும், பொறுப்புக்களை ஒப்படைத்தலும். | |
| | 5.7.2 சிறுவர்பாதுகாப்பின்மை, சிறுவர் துஷ்பிரயோகம் இடம் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக சமூகத்துக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல். | |
| | 5.7.3 இரகசிய அறிக்கைகளை முறைப்படி பேணுதலும் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படலும் | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.8 சிற்றுண்டிச்சாலையை சிறந்த முறையில் பேணுதல் | 5.8.1 சுற்றுநிருபத்திற்கமைய பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையை நடத்துதல். அதுசம்பந்தமாக சமூகத்துக்கு அறிவுறுத்துதல். | |
| | 5.8.2 உணவு தயாரிக்கும் இடம், உணவு உண்ணும் இடம் போன்றவற்றை சுத்தமாக பேணுதலும் உணவு வைத்திருக்குமிடம், தளபாடங்களை சுத்தமாக வைத்திருத்தலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 5.9 இடர்முகாமைத்துவச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளல் | 5.9.1 அனர்த்த முகாமைத்துவக் குழு அமைக்கப்படுதல். அது உயிர்ப்புடன் செயற்படுதல். ஏற்படக்கூடிய அனர்த்தங்களை அறிந்திருத்தலும் அனர்த்தத்தின்போது தொடர்பு கொள்ள வேண்டிய நிறுவனங்கள் பற்றி அறிந்திருத்தலும். | |
| | 5.9.2 திடீர் அனர்த்தத்தின்போது இழப்புக்களைக் குறைக்கக்கூடிய உபாயம் பற்றி அறிந்திருத்தலும் அது தொடர்பாக பாடசாலைச் சமூகத்திற்கு அறிவூட்டுதலும், அனர்த்த அறிவிப்புச் சமிக்ஞை முறை காணப்படுதலும், ஒழுங்கான இடைவெளியில் அனர்த்த பாதுகாப்பு ஒத்திகைகளை நடாத்துதலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| மொத்தப் புள்ளிகள் | | |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ...................................................................................................... ஒப்பம் : ................................................

திகதி : ..................................................

# 06. தலைமைத்துவமும் முகாமைத்துவமும்



## பண்புத்தரம்

- வினைத்திறன், விளைதிறன் மற்றும் வெளிப்படையான தன்மையுடன் கூடிய முகாமைத்துவ செயற்பாடொன்றினை கொண்ட தலைமைத்துவமொன்றை வெளிக்காட்டுதல்

## தேவைப்பாடுகள்

- ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விப் புலப்பாட்டுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கு ஏற்ப பாடசாலையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல்.
- தொழில் வாண்மைத்தர விழுமியங்களுடன் வகைகூறக்கூடிய கல்வித் தலைமைத்துவம் மற்றும் பங்குபற்றல் முகாமைத்துவத்தை பாடசாலையில் நடைமுறைப்படுத்தல்
- வெளிப்படைத்தன்மையுடன் கூடிய வினைத்திறனுள்ள நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்
- வினைத்திறனுள்ள முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை முன்னெடுத்துச் செல்லுதல்
- காரியாலய முகாமைத்துவத்துக்காக முறையான படிமுறை, எண்ணக்கரு பயன்படுத்துதல்
- மனித வளத்தை வினைத்திறனுள்ளதாகவும், விளைதிறனுள்ளதாகவும் முகாமைத்துவம் செய்தல்
- தொடர்ச்சியான மதிப்பீடு, கண்காணித்தல் மூலம் பாடசாலைகளின் பண்புசார் தரத்தை உறுதிப்படுத்தல்

## நியதிகள்

- தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கு ஏற்ப செயற்படுதல்
- விளைதிறனான 5 வருட, வருடாந்த அமுலாக்கல் திட்டங்களை தயாரித்தல்
- பாடசாலையின் தலைமைத்துவம்
- பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் செயற்படுத்தல்
- நேரசூசியை விளைதிறனுடையதாக செயற்படுத்துதல்
- பாடசாலையின் அன்றாட ஆரம்பம், முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைப்படி இடம்பெறுதல்
- பாடசாலையின் நிதி முகாமைத்துவத்தை முறையாக மேற்கொள்ளல்
- முறையான உள்ளக, வெளியக மதிப்பீட்டு செயற்பாடுகள் மூலம் பாடசாலையின் பண்பு சார் நிலையை உயர்த்துதல்
- மாணவர்களின் வரவு இடாப்பினை முறையாகப் பேணுதல்
- கல்வி சார், கல்வி சாரா அலுவலர்களுடைய வரவு மற்றும் பதிவுகளைப் பேணுதல்
- மனித வளங்களின் தேவையை நிறைவேற்றுதல், மற்றும் முறையான மேற்பார்வை மேற்கொள்ளுதல்
- ஊழியர்களின் தொழில் வாண்மை விருத்திக்கு நடவடிக்கை எடுத்தல்
- விளைதிறனான கல்வி, முகாமைத்துவ தகவல் முறைமையினைப் பேணுதல்
- பாடசாலையினுள் உயர் ஒழுக்கத்தைப் பேணுதல்
- ஊழியர்களின் செயலாற்றுகை தரங் கணிப்பீட்டினை மேற்கொள்ளல்
- கோவைகள் மற்றும் ஆவணங்களை முறையாகப் பேணுதல்

மதிப்பீட்டுப் படிவம் 06

## தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

புள்ளி வழங்குதல் - ஓவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | |
|---|---|---|---|
| அதிவிசேடம் | - 6 புள்ளிகள் | சாதாரணம் | - 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - 2 புள்ளிகள் |
| நன்று | - 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டிகள் | புள்ளி |
|---|---|---|
| 6.1 துரநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கு ஏற்ப செயற்படுதல் | 6.1.1 பாடசாலையின் தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட கல்வி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு தனித்தனியாக தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படல் | |
| | 6.1.2 தூரநோக்கும் பணிக்கூற்றும் பாடசாலை சமூகத்திற்கு தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தூரநோக்கையும் பணிக்கூற்றையும் அடைவதற்கேற்ற வகையில் வேலைத்திட்டங்களுக்கு சமூக ஒத்துழைப்பு பெறப்படல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.2 விளைதிறனான 5 வருட, வருடாந்த அமுலாக்கல் திட்டங்களை தயாரித்தல் | 6.2.1 பாடசாலையின் மதிப்பீடும் பகுப்பாய்வும் சமூகத்தின் முன்மொழிவுக்கமைய இனங்காணப்பட்ட தேவைகள், நோக்கங்களை அடைவதற்கேற்ற வகையில் தயாரிக்கப்படல். | |
| | 6.2.2 கற்றல், கற்பித்தல் விருத்திக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் செயற்பாட்டு வேலைத்திட்டங்களும் செயற்றிட்டங்களும் திட்டமிடப்படல். | |
| | 6.2.3 கல்வித்துறைசார் அபிவிருத்திச் சட்டகத்திற்கு அமைவாக Rolling Plan தயாரிக்கப்பட்டு செயற்பாடுகள், செயற்றிட்டங்களுக்கான செலவு மதிப்பீடுகளும் உள்ளடக்கப்படல். | |
| | 6.2.4 ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அமைவாக முன்னுரிமை அடிப்படையில் வருடாந்த அமுலாக்கல் திட்டம் , பாடசாலை நாட்காட்டி என்பன தயாரிக்கப்பட்டு வகை கூறக் கூடியவாறான மேற்பார்வையும் முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகளும் உரியவாறு செயற்படுத்தப்படல் | |
| | 6.2.5 வருடாந்த அமுலாக்கல் திட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல், முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் தேவைக்கேற்ப செயற்றிட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.3 பாடசாலையின் தலைமைத்துவம் | 6.3.1 சகலரிடத்திலும் தலைமைத்துவம் தொடர்பாக சிறந்த தூர நோக்கு காணப்படுதலும் அனைவராலும் தலைமைத்துவம் ஏற்றுக்கொள்ளப்படுதல். | |
| | 6.3.2 அனைவரும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பாடசாலையின் தரத்தை உயர்த்த முகாமைத்துவத்துக்கு பங்களிப்பு செய்தல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.4 பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் செயற்படுத்தல் | 6.4.1 பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடு பற்றி சமூகத்திற்கு விளக்கமளிப்பதுடன் செயற்பாடுகளில் சமூக ஒத்துழைப்பும் கிடைக்கிறது. (பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம்) | |
| | 6.4.2 பாடசாலை அபிவிருத்திக்குத் தேவையான சகல குழுக்களும் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுதல்.(SDC, SMT, TEC, …) | |
| | 6.4.3 நியமிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்பாடுகள் வினைத்திறனாக நடைபெறுவதுடன் கூட்டங்கள், முன்னேற்ற மீளாய்வுகள் நடாத்தப்பட்டு, அறிக்கைகளும் கோவைகளும் உரிய முறைப்படி பேணப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.5 நேரசூசியை விளைதிற-னுடையதாக செயற்படுத்துதல் | 6.5.1 சுற்று நிருபத்திற்கமைய(நூலகம், கணனி ஆய்வு கூடம் ஏனைய விசேட அலகுகளையும் உள்ளடக்கி) ஆசிரிய வளங்களின் உச்சப்பயனைப் பெறும் வகையில் நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு தேவையான இடங்களில் காட்சிப்படுத்தப்படல். | |
| | 6.5.2 நேர அட்டவணை, பதில் நேர அட்டவணை என்பன செயற்படுவது தொடர்பாக உரியவாறு கண்காணிக்கப்படுகின்றது. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |

| | | |
|---|---|---|
| 6.6 பாடசாலையின் அன்றாட ஆரம்பம், முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைப்படி இடம்பெறுதல் | 6.6.1 உரிய நேரத்தில் பாடசாலை தொடக்கமும் முடிவும் திட்டமிடப்பட்ட முறையில் இடம்பெறுவதுடன் மத வழிபாட்டு நடவடிக்கைகளில் சகல ஆசிரியர்களும் மாணவர்களும் உரியவாறு பங்குபற்றுதல். | |
| | 6.6.2 ஆசிரிய மாணவர் பங்குபற்றலுடன் உடலியக்க செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகின்றமை. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.7 பாடசாலையின் நிதி முகாமைத்துவத்தை முறையாக மேற்கொள்ளல் | 6.7.1 சுற்று நிருபத்திற்கமைய நிதி நடவடிக்கைகள் இடம் பெறுவதுடன் மேற்பார்வையும் இடம் பெறுதல் (SDC, FF, Salary, ..) | |
| | 6.7.2 பாடசாலைக் கணக்குகள், நிதிக்கோவைகள் உரிய முறைப்படி பேணப்படுவதுடன் இற்றைப்படுத்தலும் இடம் பெறுதல். | |
| | 6.7.3 நிதிப் பாவனை, வருடாந்த திட்டத்தின் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது, செலவினங்கள் பயனுள்ள வகையில் மேற்கொள்ளப்படுதல். நிதிப் பாவனை உரிய முறைப்படி மேற்பார்வை செய்யப்படுதல். | |
| | 6.7.4 நிதி தொடர்பான நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மை கொண்டதாக செயற்படுத்தலும் முறையான கண்காணிப்பு நடைபெறுதலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.8 முறையான உள்ளக, வெளியக மதிப்பீட்டு செயற்பாடுகள் மூலம் பாடசாலையின் பண்பு சார் நிலையை உயர்த்துதல் | 6.8.1 முறையான உள்ளக மதிப்பீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டு உள்ளக மதிப்பீடு முறைப்படி இடம் பெறுகின்றது. | |
| | 6.8.2 உள்ளக வெளியக மதிப்பீட்டு அறிக்கையில் காணப்படுகின்ற பலம், பலவீனம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு பின்னூட்டல் இடம் பெறுகிறது. | |
| | 6.8.3 இனங் காணப்பட்ட அபிவிருத்திக்கான தேவைகளும் முன்னுரிமைகளும் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | |
| | 6.8.4 உள்ளக / வெளியக மதிப்பீட்டு அறிக்கைகள் ஒழுங்காகக் கோவைப் படுத்தப்பட்டிருப்பதுடன் அவற்றின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.9 மாணவர்களின் வரவு இடாப்பினை முறையாகப் பேணுதல் | 6.9.1 மாணவர் சேர்வு இடாப்பு இற்றைப்படுத்தப்பட்டு மாணவர் தினவரவு, முறைப்படியும் தூய்மையாகவும் இடாப்பில் பதிவு செய்யப்படுதல். | |
| | 6.9.2 மாணவர் சேர்வு இடாப்பு நாளாந்த / மாதாந்த / வருடாந்த வரவுப் பதிவுகள் சாராம்சம் செய்யப்பட்டு பகுப்பாய்வின்மூலம் வரவுப் பிரச்சினையான மாணவர்கள் இனங்காணப்பட்டு வரவுப் பிரச்சினையுள்ள மாணவர்கள் தொடர்பான செயற்றிட்டம் தயாரிக்கப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.10 கல்வி சார், கல்வி சாரா அலுவலர்களுடைய வரவு மற்றும் பதிவுகளைப் பேணுதல் | 6.10.1 கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் வரவு ஒப்பப்பதிவேடு உரிய நேரத்தில் மூடப்பட்டு வரவின்மை பதியப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றது. | |
| | 6.10.2 அனுமதியுடன் லீவு பெறுகின்ற நடைமுறை உரியவாறு பேணப்படுவதுடன் பதில் கடமை ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. சம்பளமற்ற லீவுகள் அறிக்கைப்படுத்தப்படுகின்றன. | |
| | 6.10.3 வரவு சாராம்சம் செய்யப்பட்டு பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டு பரிகார நடவடிக்கைகள் இடம் பெறுவதுடன் சம்பள ஏற்ற நடவடிக்கைளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. | |
| | 6.10.4 பிந்திய வருகை, நாளாந்த லீவு, குறுகிய லீவு என்பன பதிவேடுகளிலும் கோவைகளிலும் பேணப்படுவதுடன் தினமும் இற்றைப் படுத்தப் படுகிறது. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.11 மனித வளங்களின் தேவையை நிறைவேற்றுதல், மற்றும் முறையான மேற்பார்வை மேற்கொள்ளுதல் | 6.11.1சுற்று நிருபத்தின்படி கல்வி சார் ஆளணியின் தேவைப்பாடு பற்றாக்குறை மேலதிகம் என்பன கணிப்பிடப்பட்டு அது தொடர்பாக பொருத்தமான பிரிவுக்கு தகவல் வழங்கப்படுதல். | |
| | 6.11.2 சுற்று நிருபத்தின்படி கல்வி சார், கல்வி சாரா ஆளணியினரின் கடமைப்பொறுப்புக்கள் எழுத்து மூலம் வழங்கப்படுதல், கடமைப்பொறுப்புக்களை முறையாக மேற்பார்வை செய்தல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |

| | | |
|---|---|---|
| 6.12 ஊழியர்களின் தொழில் வாண்மை விருத்திக்கு நடவடிக்கை எடுத்தல் | 6.12.1 கல்வி சார், கல்வி சாரா ஊழியர்களின் தொழில் வாண்மை விருத்தித் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மட்ட வாண்மை விருத்தி தொடர்பாக வளவாளர் குழு இனங் காணப்பட்டு பட்டியல் பாடசாலையில் பேணப்படுதல். | |
| | 6.12.2 அதனடிப்படையின் சகலரின் பங்குபற்றலுடன் தரவட்டம், பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டம் (SBTD), கல்வி சாரா ஊழியர்களின் வாண்மை விருத்தி தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | |
| | 6.12.3 கல்வி சார், கல்வி சாரா ஆளணியினருக்கு வழங்கப்படும் பல்வேறு வெளியக தொழில் வாண்மைவிருத்தி வேலைத்திட்டங்களில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுதலும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாண்மை ஏனையோருக்கும் பகிரப்பட ஏற்பாடு செய்லும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.13 விளைதிறனான கல்வி, முகாமைத்துவ தகவல் முறைமையினைப் பேணுதல் (EMIS) | 6.13.1 மாணவர், ஆசிரியர், பொளதிக வளங்கள் தொடர்பான தகவல்கள் முறைப்படி பேணப்படுதல். | |
| | 6.13.2 அடைவு மட்டப்பகுப்பாய்வு தகவல் ( பரீட்சை / செயற்றிட்டம்/ மதிப்பீடு/ மாணவர் புள்ளிப்பதிவேடு) பேணப்படுதல் | |
| | 6.13.3 தகவல்களை இலகுவாகவும் விரைவாகவும் வழங்கவும் பெறவும் ஏற்றவகையிலும் இற்றைப்படுத்தி தீரமானம் எடுத்தலுக்கு ஏற்ற வகையில் தகவல்தளம் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.14 பாடசாலையினுள் உயர் ஒழுக்கத்தைப் பேணுதல் | 6.14.1 ஒழுக்காற்றுக்குழு அமைக்கப்பட்டுள்ளதுடன் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஏற்படக்கூடிய ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றை முறைப்படி தீர்ப்பதற்கான வழிமுறைகள் கண்டறியப்பட்டு சகல விடயங்களும் ஆவணப்படுத்தப்படல். | |
| | 6.14.2 ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் தொடர்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒழுக்கநெறிக்கோவை தயாரிக்கப்பட்டு சகலருக்கும் அறிவுறுத்தப்பட்டு தேவைக்கேற்ப இற்றைப்படுத்தப்படுகிறது. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.15 ஊழியர்களின் செயலாற்றுகை தரங் கணிப்பீட்டினை மேற்கொள்ளல் | 6.15.1 கல்விசார், கல்விசாரா சகல ஆளணியினரதும் செலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையாக்கப்பட்டு சுயவிபரக் கோவையில் இடம்பெறுதல். | |
| | 6.15.2 பாடசாலை ஆளணியினரின் இனங்காணப்பட்ட அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்யவும் விசேட திறன்களை மதிப்பிடுவதற்குமான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 6.16 கோவைகள் மற்றும் ஆவணங்களை முறையாகப் பேணுதல | 6.16.1 சகல கோவைகளும் பதிவேடுகளும் அலுவலக நடைமுறைகளுக்கேற்ப முறைமையாகத் தயாரிக்கப்பட்டு கோவைகளும் தகவல்களும் இலகுவில் அடையாளம் காணுவதற்கேற்ற வகையில் ஒழுங்கமைப்பைக் கொண்டுள்ளதுடன் கோவைகளும் பதிவேடுகளும் பட்டியலிடப்பட்டுள்ளமை. | |
| | 6.16.2 அவசியமான பழைய கோவைகள் அவதானத்துடன் பேணிப்பாதுகாக்கப்படுகின்றமை, தேவையற்றவை முறையாக நீக்கப்படுகின்றன. | |
| | 6.16.3 தினசரி கிடைக்கப்பெறும் கடிதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| மொத்தப்புள்ளி | | |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ................................................................................ ஒப்பம் : ................................................

திகதி : ..................................................

இம் மதிப்பிட்டுத் துறைகள் தொடர்பான விசேட ஆலோசனைகள்

| சுட்டிகள் | ஆலோசனைகள் |
|---|---|
| திட்டமிடல் | சகல பிரிவுகளையும் உள்ளடக்கி ஐந்தாண்டுத்திட்டத்தை தயாரித்து வருடாந்தம் இற்றைப்படுத்தி முன்னோக்கி செல்லல். |
| நிதி முகாமைத்துவம் | பாடசாலை அபிவிருத்திக் கணக்கு தற்போது கல்வியமைச்சின் 07/2013 இற்கேற்ப பாடசாலை அபிவிருத்திக்கணக்கு உரிய முறைப்படி பேணப்படுதல்.<br>வசதிகள் சேவைகள் கணக்கு,பற்றுச்சீட்டுக்கள், சிட்டைகளின் பிரதிகள், அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவு மதிப்பீடு, பற்றுச்சீட்டுக் கோவைகள் யாவும் பரிசீலிக்கப்பட்டு புள்ளி வழங்கப்படவேண்டும்.<br>ஏனைய சகல கணக்குகள் தொடர்பாகவும் பொருத்தமான சகல ஆவணங்களும் கோவைகளும் உள்ளமையை பரிசீலித்து புள்ளி வழங்கப்பட வேண்டும். |
| கோவைகளைப் பேணுதல். | கோவைகளைப் பேணும்போது அலுவலக முறைமையை பின்பற்றி பேணுவதுடன், இலகுவாக அடையாளம் காண்பதற்கு பல்வேறு முறைகளை உருவாக்கி பயன்படுத்துதல். (குறிப்புப்பத்திரம், வர்ணம், இலக்கங்கள்,..)<br>தேவையற்ற கோவைகளை அகற்றும்போது நடைமுறைகளை பின்பற்றி தேவையான சந்தர்ப்பங்களில் அனுமதி பெற்றிருத்தல். |

# 7. பௌதீக வள முகாமைத்துவம்



| பண்புத்தரம் | தேவைப்பாடுகள் | நியதிகள் |
|---|---|---|
| கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைப் பாடசாலையில் விருத்தி செய்வதற்கு பாடசாலையின் பௌதீக வளங்களை வினைத்திறன் மற்றும் விளைதிறனுடையதாக பயன்படுத்துவர். | கற்றல் கற்பித்தல் மற்றும் பலவகைக் கல்வித் தேவைகளுக்கேற்ப காணப்படும் பௌதீக வளங்களை வினைத்திறனுடையதாக பயன்படுத்தல் | பாடசாலைக் காணி, மற்றும் வரைபடம் முறையாகப் பேணப்படல் |
| | | கட்டிடங்கள், அடிப்படை வசதிகளைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தல். |
| | | தளபாடங்கள், கற்றல் உபகரணங்களை வினைத்திறனுள்ளதாக பயன்படுத்துதலும் பேணுதலும் |
| | பௌதீக வளங்களை பேணுதல் மற்றும் அபிவிருத்தி வேலைகளை இற்றைப்படுத்தல் நடவடிக்கை எடுத்தல் | பொருட்பதிவுப் புத்தகம், பொருள் இருப்புப் புத்தகத்தை முறையாகப் பேணல். |
| | | ஆய்வுகூட வசதியைச் செய்து கொடுத்தல், வினைத்திறனுடன் பாவித்தல், பேணுதல். |
| | | நூலகத்தை வினைத்திறனுடன் பாவித்தலும் அபிவிருத்தி அடையச் செய்தலும். |
| | | கணனி வசதிகளை பயனுள்ளதாக பயன்படுத்தலும், பேணுதலும். |
| | | செயன்முறைப் பாடங்களுக்குரிய விசேட அலகுகளை பயனுள்ளதாக பயன்படுத்தலும், பேணுதலும். |

மதிப்பீட்டுப் படிவம் 07

## பௌதிக வள முகாமைத்துவம்

புள்ளி வழங்குதல் - ஒவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | |
|---|---|---|---|
| அதிவிசேடம் | - 6 புள்ளிகள் | சாதாரணம் | - 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - 2 புள்ளிகள் |
| நன்று | - 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டிகள் | புள்ளி |
|---|---|---|
| 7.1 பாடசாலைக் காணி, மற்றும் வரைபடம் முறையாகப் பேணப்படல். | 7.1.1 பாடசாலைக் காணியின் இற்றைப்படுத்தப்பட்ட வரைபடம் தெளிவாகக் காட்சிப்படுத்தியிருத்தலும், கட்டடங்கள் யாவும் தெளிவாக இலக்கமிடப்பட்டும், பெயரிடப்பட்டும், திசைகளும் காட்டப்பட்டிருத்தல். | |
| | 7.1.2 பாடசாலைவளாகம் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் பேணப்படுவதற்கான வேலைத்திட்டம் நடைமுறையிருத்தல், பாடசாலைக் காணி பயனுறுதி வாய்ந்த விவசாய நடவடிக்கைகளிற்காகவும் அலங்காரத் தாவரங்கள் வளர்க்கவும் பயன்படுத்தப்படுதல். | |
| | 7.1.3 பாடசாலை வளாகம் ஆக்கபூர்வமான கற்றல் சூழலைக் கொண்டுள்ளது. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 7.2 கட்டிடங்கள், அடிப்படை வசதிகளைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தல். | 7.2.1 பாடசாலைகளில் உள்ள வளங்களின் உச்சப் பயன்பாட்டினைப் பெறுவதற்காக பாடசாலையின் வெவ்வேறு பிரிவுகளிற்கும் தேவைகளுக்கும் ஏற்ப பொருத்தமான இடங்களை ஒதுக்கி அவற்றை முறையாகப் பராமரித்தல். | |
| | 7.2.2 வகுப்பறைகள் சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் பேணப்பட்டு, மாணவர்களின் ஆக்கங்களைக்கொண்ட கற்றல் சூழல் பேணப்படுதல். | |
| | 7.2.3 நீர் மற்றும் மின்சாரம் என்பன சிக்கனமாகவும் பாதுகாப்பாகவும் பாவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை. | |
| | 7.2.4 அலுவலக பௌதிக சூழல் முறையாக பேணப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 7.3 தளபாடங்கள், கற்றல் உபகரணங்களை வினைத்திறனுள்ளதாக பயன்படுத்துதலும் பேணுதலும் | 7.3.1 உடைந்த தளபாடங்கள், பழுதடைந்த தளபாடங்களை களஞ்சியப்படுத்தி வைக்கவும், அவற்றைத் திருத்துவதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துதல், பயன்படுத்தமுடியாதவற்றை அகற்றுவதற்கான நடைமுறை இருத்தல். | |
| | 7.3.2 ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் செயற்பாட்டு மேசை, புத்தகமூலை, புத்தக இறாக்கை, கற்றல் உபகரணங்கள் என்பனவற்றை பராமரிப்பதற்கும், திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 7.4 பொருட்பதிவுப் புத்தகம், பொருள் இருப்புப் புத்தகத்தை முறையாகப் பேணல். | 7.4.1 அலுவலகத்தில் பிரதான பொருட்பதிவேட்டுப் புத்தகமும், உபபொருட்பதிவேட்டு புத்தகமும் இற்றைப்படுத்தி பேணப்படுகின்றமை. | |
| | 7.4.2 பொருட் கணக்கெடுப்பு செய்வதற்காக உரிய காலத்தில் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொருட் கணக்கெடுப்பின்போது விதந்துரைக்கப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 7.5 ஆய்வுகூட வசதியைச் செய்து கொடுத்தல், வினைத்திறனுடன் பாவித்தல், பேணுதல். | 7.5.1 ஆய்வுகூடம் சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் அமைந்துள்ளதுடன் அவ்விடம் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுதல் | |
| | 7.5.2 அனைத்து இரசாயனப் பொருட்களும் உபகரணங்களும் பெயரிடப்பட்டு பாதுகாப்பாகக் கையாளப்படுதல். | |
| | 7.5.3 பொருத்தமான அனைத்து வகுப்புகளுக்கும் விஞ்ஞான ஆய்வுகூட பயன்பாடு தொடர்பான நேர அட்டவணை பேணப்பட்டு விஞ்ஞான ஆய்வுகூட பாவனைக்கான பதிவேடும் பேணப்படுதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |

| | | |
|---|---|---|
| 7.6 நூலகத்தை வினைத்திறனுடன் பாவித்தலும் அபிவிருத்தி அடையச் செய்தலும். | 7.6.1 நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன பட்டியலிடப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளமை | |
| | 7.6.2 அனைத்து வகுப்புகளுக்கும் நூலக பயன்பாடு தொடர்பான நேர அட்டவணை பேணப்பட்டு பாவனைக்கான பதிவேடும் பேணப்படுதல் | |
| | 7.6.3 பாடசாலை நூலகத்தை கற்றல் வள நிலையமாக அபிவிருத்திசெய்து நல்ல பயனள்ள வகையில் பயன்படுத்துதல் (உதா: வகுப்பறை நூலகம், புத்தகப் பை, பிறந்தநாள் பரிசு, புத்தக மூலை....) | |
| | 7.6.4 நூல்களை வழங்குதல், பெறுதல், பாவித்தல், பாதுகாத்தல் தொடர்பான முறையான வேலைத்திட்டம் உள்ளது. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 7.7 கணனி வசதிகளை பயனுள்ளதாக பயன்படுத்தலும், பேணுதலும். | 7.7.1 கணினி அறை கற்றல் சூழலுடன் சுத்தமாக வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. கணினி வன்பொருள், மென்பொருட்கள் உரிய முறையில் பராமரிக்கப்படும் நடைமுறை இருத்தல். | |
| | 7.7.2 கணினியும் உபகரணங்களும் உரியவாறு பொருத்தப்பட்டுள்ளதுடன் கணினி அலகைப் பாவிப்பது தொடர்பான அறிவுறுத்தல், கட்புல கற்றல் துணைச்சாதனங்கள் காட்சிப்படுத்தப்படுதல். | |
| | 7.7.3 கணினி அலகின் பயன்பாடு தொடர்பான ஆவணங்களை(சம்பவத் திரட்டுப்புத்தகம், நேரசூசி, இருப்புக் கையேடு, அழிபொருட் கையேடு,...) கணினி ஆய்வுகூட பாவனைக் கைநூல் அடிப்படையில் பேணுதல். | |
| | 7.7.4 கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்கான இணையத்தள வசதிகளும், மென்பொருள் பாவனை வசதிகளும் உள்ளமை. | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 7.8 செயன்முறைப் பாடங்களுக்குரிய விசேட அலகுகளை பயனுள்ளதாக பயன்படுத்தலும், பேணுதலும். | 7.8.1 தொழிநுட்ப பீடம் / கணித / மொழி / மனையியல் / விவசாய / அழகியல் / மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் உள்ளிட்ட சகல விசேட அலகுகளும் கற்றல் சூழலுடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையுடன் சகல அலகுகளுக்குமான பொறுப்புகள் உரிய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் பேணப்படுகின்றமை. | |
| | 7.8.2 இவ் விஷேட அலகுகளை சுத்தம் செய்தல் பாதுகாப்பாக வைத்திருத்தல் அபிவிருத்தி செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | |
| | 7.8.3 சகல அலகுகளிலும் வளங்களின் உச்சப்பயன்பாட்டைப் பெறும் வகையில் தகவல்கள், அறிவுறுத்தல்கள், நேர அட்டவணை என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை. | |
| | 7.8.4 ஏனைய பௌதீக வளங்கள் (விளையாட்டு மைதானமும் விளையாட்டு உபகரணங்களும்...) உச்சஅளவில் பாவிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| மொத்த புள்ளிகள் | | |

| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ..................................................................................................... ஒப்பம் : ................................................

திகதி : .................................................

# 8. பாடசாலையும் சமூகமும்

| பண்புத்தரம் | தேவைப்பாடுகள் | நியதிகள் |
| --- | --- | --- |
| சமூகத்துடன் அந்நியோன்னியமாக இயங்கி கல்வி, சமூக விருத்தியை ஏற்படுத்துதல் | பாடசாலையின் நோக்கத்தை அடைவதற்கு திட்டமிடப்பட்ட சமூக உதவியைப்பெறல். | கற்றல் விருத்திச் செயற்பாடுகளுக்கு பெற்றோரின் உதவியைப் பெறுதல். |
| | | பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்காக சமூகத்தின் உயர் பங்களிப்புக் கிடைத்தல் |
| | பல்வேறு சமூக சேவைச் செயற்பாடுகள் மூலம் பாடசாலைச் சமூகத்துக்கு உதவி புரிதல் | பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவை மிகவும் சிறப்பாகச் செயற்படுதல் |
| | சமூக தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் பல்வேறு சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல். | பாடசாலையின் நாளாந்தத் தகவல்கள் இற்றைப் படுத்தப்பட்டுள்ளமை |
| | | சமூக அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு கிடைத்தல் |



மதிப்பீட்டுப் படிவம் 08

# பாடசாலையும் சமூகமும்

புள்ளி வழங்குதல் - ஒவ்வொரு சுட்டிக்கும் உரிய நியதிகளை அவதானித்து கீழ்வரும் திட்டத்திற்கு அமைய புள்ளிகளை வழங்கவும்.

| | | | |
|---|---|---|---|
| அதிவிசேடம் | - 6 புள்ளிகள் | சாதாரணம் | - 3 புள்ளிகள் |
| மிகவும் நன்று | - 5 புள்ளிகள் | அபிவிருத்தி அடைய வேண்டும் | - 2 புள்ளிகள் |
| நன்று | - 4 புள்ளிகள் | விரைவாக அபிவிருத்தி அடைய வேண்டும் | - 1 புள்ளிகள் |

| நியதிகள் | சுட்டிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 8.1 கற்றல் விருத்திச் செயற்பாடுகளுக்கு பெற்றோரின் உதவி பெறுதல். | 8.1.1 சகல வகுப்புகளிலும் தரவட்டங்களை உருவாக்கியிருத்தலும் குறைந்தது தவணைக்கு ஒரு தடவையாவது தரவட்டங்களை நடத்துதலும் தரவட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துதலும் அறிக்கைகளைப் பேணுதலும். | |
| | 8.1.2 தரவட்டங்களில் கலைத்திட்டம், செயற்றிட்டங்கள், மதிப்பீடுகள், சுற்றறிக்கைகள் , புதிய போக்குகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு அறிவூட்டுதல். | |
| | 8.1.3 ஒவ்வொரு மாணவர் தொடர்பிலும் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்துதலும், கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பின்னூட்டல், முன்னூட்டல் தொடர்பில் உணர்த்துதல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 8.2 பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளுக்காக சமூகத்தின் உயர் பங்களிப்புக் கிடைத்தல் | 8.2.1 சமூக பங்களிப்பினைப் பெறக்கூடிய விசேட சந்தர்ப்பங்களை இனங்காணுதலும் நடவடிக்கை மேற்கொள்ளுதலும் பாடசாலையுடன் தொடர்புடைய சமூகத்திடம் இருந்து பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பான உதவிகளைப் பெற்றிருத்தல் (பாடசாலையின் பண்புசார் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் / திருத்த வேலைகள் / பாடசாலைச் சூழலை அலங்கரித்தல் / பாதுகாப்பு வழங்குதல்). | |
| | 8.2.2 பழைய மாணவர்கள், அரச நிறுவனங்கள், வளவாளர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் வேறு நிறுவனங்களின் தரவுகளை இற்றைப்படுத்தி வைத்திருத்தலும் பாடசாலைக்கு உதவி வழங்கக்கூடிய நிறுவனங்கள் / தனிநபர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதலும் | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 8.3 பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவை மிகவும் சிறப்பாகச் செயற்படுதல் | 8.3.1 பாடசாலை அபிவிருத்திச் சங்கம் / சபைக் கூட்டங்களை உரிய காலங்களில் நடாத்துதல் / பெற்றோர்கள் மற்றும் சபை உறுப்பினர்களின் உயர்ந்த பங்குபற்றுதலைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | |
| | 8.3.2 அங்கத்தவர் பெயர் பட்டியலை இற்றைப்படுத்தி கோவைப்படுத்தி பேணுதல். | |
| | 8.3.3 பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டங்களில் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்துதலும், முன்னேற்றங்களை எதிர்வரும் கூட்டங்களில் முன்வைத்தலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| 8.4 பாடசாலையின் நாளாந்தத் தகவல்கள் இற்றைப் படுத்தப்பட்டுள்ளமை | 8.4.1 பல்வேறு தொடர்பாடல் முறைகளைப் பாவித்தல் (விளம்பரப்பலகை / உள்ளக விளம்பரப் புத்தகம் / பெற்றோர் ஆசிரியர் தொடர்புப் புத்தகம்). | |
| | 8.4.2 பாடசாலை நாட்காட்டி தொடர்பிலும் பாடசாலையில் செயற்படுத்தப்படும் விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் சமூகத்தை அறிவூட்டுதலும் சமூகத்தின் கருத்துக்களைப் பெறுவதற்கான மாற்று முறைமைகளை செயற்படுத்துதல் (ஆலோசனைப் பெட்டி, வினாக்கொத்து...) போன்றன. | |
| | 8.4.3 அதிபர் / ஆசிரியர் சந்திப்பு தொடர்பில் தெளிவான முறைமை ஒன்று இருத்தல், சமூகத்தேவை தொடர்பான தரவுகளை அறிக்கைப்படுத்துதலும் பிரச்சினைகளைத் தீர்த்தலும். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |

| | | |
|---|---|---|
| 8.5 சமூக அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு கிடைத்தல் | 8.5.1 பாடசாலையின் மூலம் சமூகத்துக்கு கிடைக்கக்கூடிய வளங்களை இனம்காணுதலும் அது தொடர்பில் சமூகத்தை அறிவூட்டுதலும், பல்வேறு சமூக வேலைத்திட்டங்களை நடத்துதல் ( சிரமதானம் / முகாம்). | |
| | 8.5.2 சமூகம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை பாடசாலைகள் மூலம் இனங்காணுதலும் அப்பிரச்சினைகள் தொடர்பில் தேவையான சந்தர்ப்பத்தில் உதவிகளை வழங்குதலும் சமூகத்துக்கு உதவிகள் வழங்குவது தொடர்பான அறிக்கைகளை (அட்டவனை / புகைப்படங்கள் / வேறு ஆதாரங்கள் ) வைத்திருத்தல். | |
| | நியதிக்கான மொத்தப் புள்ளி | |
| மொத்தப் புள்ளி | | |


| மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளுக்கேற்ப பெறவேண்டிய புள்ளிகள் | பெறப்பட்ட புள்ளிகள் | சதவீதம் |
|---|---|---|---|
| | | | |

மதிப்பீட்டாளரின் பெயர் : ........................................................................................ ஒப்பம் : .................................................

திகதி : ..................................................

# 3. புள்ளி வழங்கல்

சகல மதிப்பீட்டுத் துறைகளுக்கும் ஒவ்வொரு நியதிகளின் கீழ் சுட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுட்டிகளுக்குமான புள்ளிகள் வழங்கும் போது குறிப்பிட்ட சுட்டி பாடசாலையில் செயற்படும் தரம் / மட்டத்தினை கருத்தில் கொண்டு கீழ்வரும் வீச்சுகளின் ஊடாக புள்ளி வழங்குதல் நடைபெற வேண்டும்.




புள்ளி அளவுகள் தீர்மானிக்கப்படுவது குறிப்பிடப்பட்ட நியதிகளில் காணப்படுகின்ற விடயத்தினை சரியாக செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பதனை அறிந்து கொண்டதன் பின்னர் அதன் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது.

புள்ளிகள் - 06 - அதிவிசேடம்
புள்ளிகள் - 05 - மிகநன்று
புள்ளிகள் - 04 - நன்று
புள்ளிகள் - 03 - சாதாரணம்
புள்ளிகள - 02 - அபிவிருத்தி அடையப்பட வேண்டும்
புள்ளிகள - 01 - மிகவேகத்தில் அபிவிருத்தி அடைய வேண்டும்.

## 3.1 ஒவ்வொரு மதிப்பீட்டுத் துறைக்குமான சதவீதத்தைக் கணக்கிடல்.

$$\text{துறைக்கான புள்ளி நூற்றுவீதம்} = \frac{\text{பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகள்}}{\text{சுட்டிகளுக்கமைய பெற்றுக்கொள்ளக் கூடிய புள்ளிகளின் தொகை}} \text{ X } 100\%$$

உதாரணம்:

தலைமைத்துவம் முகாமைத்துவத்திற்காக புள்ளிகளை இடுகையில் பாடசாலை ஒன்று 45 சுட்டிகளுக்காக 120 புள்ளிகளை பெற்றுக்கொண்டது எனின், அப்பாடசாலை பெற்றுக்கொண்ட புள்ளி நூற்றுவீதம் பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\frac{\text{தலைமைத்துவமும் முகாமைத்துவமும் தொடர்பாக பெற்ற புள்ளி}}{\text{மதிப்பீடு செய்யப்பட்ட சுட்டிகளால் பெற்றுக் கொண்ட உச்ச புள்ளிகளின் தொகை - நூற்றுவீதம்}} = \frac{120}{270\ (45\text{x}6)} \text{ X } 100$$

$$= 44\%$$

மேற்குறிப்பிட்ட முறையினால் கணக்கிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட நூற்றுவீதம் பெறுமதி கிட்டிய முழுஎண்ணில் குறிப்பிடவும்.

## 3.2 கற்றல்கற்பித்தலும் மதிப்பீடும் சம்பந்தமாக புள்ளிவழங்கல்.

### 3.2.1 ஒவ்வொரு ஆசிரியர்களும் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் சதவீதத்தைக் கணக்கிடல்.

$$\text{ஆசிரியர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் நூற்றுவீதம்} = \frac{\text{ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப்புள்ளிகள்}}{\text{மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட சுட்டிகளின் அளவுக்கமைய பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள்}} \times 100$$

உதாரணம்:

A எனும் ஆசிரியர் மதிப்பீட்டின் போது 30 சுட்டிகளுக்காக 122 புள்ளிகள் பெற்றுக் கொண்டார் என கருதின் A எனும் ஆசிரியர் பெற்ற புள்ளி நூற்று வீதம்.

$$\text{புள்ளிச் சதவீதம்} = \frac{122}{(30X6)} \times 100\% = 67.7\%$$

### 3.2.2 கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீடு துறையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் சராசரி நூற்று வீதத்தைக் கணக்கிடல்.

கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீடு சம்பந்தமாக பாடசாலை பெற்ற சராசரி புள்ளி நூற்று வீதம் பின்வருமாறு =

$$\frac{\text{பாடசாலையில் சகல ஆசிரியர்களும் பெற்றுக் கொண்ட புள்ளி நூற்று வீத கூட்டுத்தொகை}}{\text{மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட மொத்த ஆசிரியர்களின் தொகை}}$$

உதாரணம்:

6 ஆசிரியர்கள் மதிப்பீட்டுக்கு உட்படும் இடத்தில் கீழ்க் காணுமாறு புள்ளிகள் கணக்கிடப்பட வேண்டும்.

| ஆசிரியர் தொகை | ஆசிரியர் பெற்றுக் கொண்ட புள்ளிச் சதவீதம் |
|---|---|
| 1 | 63% |
| 2 | 54% |
| 3 | 59% |
| 4 | 46% |
| 5 | 60% |
| 6 | 67% |
| மொத்தம் | 349 |

கற்றல் கற்பிதிதல் மதிப்பீடு பாடசாலை பெற்ற புள்ளிகளின் சதவீதம்

$$= \frac{349}{6} = 58\%$$

### 3.3 பாடசாலைக் கல்வி பண்புத்தரச் சுட்டியினைக் கணக்கிடல்.

மதிப்பீட்டுத் துறைகளுக்கான புள்ளி வழங்கியதன் பின்னர் பின்வரும் விதத்தில் பாடசாலை கல்விப் பண்புத்தரச் சுட்டியை கணக்கிட வேண்டும்.

$$\text{பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டி} = \frac{\text{மதிப்பீட்டுத்துறைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் நூற்றுவீதத்தின் கூட்டுத்தொகை}}{\text{மதிப்பீட்டுத்துறைகளின் தொகை}}$$

### 3.4 முழு மதிப்பீடு

உள்ளக, வெளியக மதிப்பீட்டினை நடத்தி அவ்வவ் மதிப்பீட்டுத் துறைகளுக்குப் புள்ளிகள் வழங்கி பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டியைத் தயாரித்ததன் பின் பாடசாலை பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் மதிப்பிட்டுத்துறை சம்பந்தமாக கீழ்க் குறிப்பிடப்படும் புள்ளி எல்லைகளுக்கேற்ப பாடசாலை பெற்ற மொத்த மதிப்பீட்டினை குறிப்பிட வேண்டும்.

புள்ளி 80% க்கு மேல் - அதிவிசேடம்
புள்ளி 70% - 79% - மிகநன்று
புள்ளி 60% - 69% - நன்று
புள்ளி 50% - 59% - சாதாரணம்
புள்ளி 40% - 49% - அபிவிருத்தி அடைய வேண்டும்
புள்ளி 40% - மிகவேகத்தில் அபிவிருத்தி அடைய வேண்டும்

பாடசாலைக்கு ஒவ்வொரு மதிப்பீட்டுத்துறை சம்பந்தமாக வழங்கப்பட்ட புள்ளிகளின் படி பாடசாலைக் கல்வி ப்பண்புத்தர சுட்டிகளின் புள்ளியினை கணக்கிடல்

| இல | மதிப்பீட்டுத்துறைகள் | முழுச்சுட்டிகளின் எண்ணிக்கை | பெறக் கூடிய புள்ளிகளின் உயர் தொகை | மதிப்பிடப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | கிடைக்கக்கூடிய உச்சப்புள்ளி | பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகள் | நூற்றுவீதம் | மொத்த மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாணவர் அடைவு | 35 | 210 (35x6) | 32 | 192 | 118 | 61% | நன்று |
| 2 | கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீடு | 30 | | | | | 58% | சாதாரணம் |
| 3 | முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | 25 | 150 (25x6) | 23 | 138 | 102 | 74% | மிக நன்று |
| 4 | இணைப்பாடவிதான செயற்பாடுகள் | 14 | 84 (14x6) | 14 | 84 | 65 | 77% | மிக நன்று |
| 5 | மாணவர் நலன்புரி | 22 | 132 (22x6) | 20 | 120 | 80 | 67% | நன்று |
| 6 | தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | 45 | 270 (45x6) | 45 | 270 | 170 | 63% | நன்று |
| 7 | பௌதீக வள முகாமைத்துவமும் | 26 | 156 (26x6) | 25 | 150 | 60 | 40% | விருத்தி செய்யப்பட வேண்டும் |
| 8 | பாடசாலையும் சமூகமும் | 13 | 78 (13x6) | 12 | 72 | 45 | 62% | நன்று |
| | மொத்தம் | 210 | 1080 | 171 | 1026 | 640 | | |
| | பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டி | | | | | | 63% | நன்று |

பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டி

$$\frac{61 + 58 + 74 + 77 + 67 + 63 + 40 + 62}{8} = 63\%$$

# 4. பண்புத்தரத்தை உறுதிப்படுத்துவது தொடர்பான வினாக்கள்.

ஒவ்வொரு உள்ளக / வெளியக மதிப்பீட்டின் பின்னர், பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆசிரியர் குழாத்துடன் கலந்துரையாடிக் கீழ்வரும் வினாக்களுக்கு அமைவாக சாராம்ச அறிக்கை தயாரிக்கவும். அது தொடர்பில் புள்ளியிடுதல் அவசியம் இல்லை என்பதோடு பாடசாலையின் எதிர்கால முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

**4.1 மாணவர் அடைவு மட்டம் தொடர்பாக கலந்துரையாடப்படவேண்டிய விசேட அம்சங்கள்**

1. விசேட தேவையுடைய பிள்ளைகள் உட்பட சகல மாணவர்களினதும் அடைவு மட்டம் வெவ்வேறாக இனம் காணப்படுகின்றதா?
2. குறைந்த அடைவு மட்டம் உள்ள மாணவர்கள் தொடர்பாக பொருத்தமான பரிகார வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றதா? அவ்வேலைத்திட்டத்திற்கூடாக எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகள் அண்மிக்கப்பட்டுள்ளனவா?
3. மாணவர்களின் அடைவ மட்டத்தில் பாரிய இடைவெளி காணப்படுகின்றதா? அவ்வாறாயின் நாம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை?
4. மாணவர் கணிப்பீடு / மதிப்பீடு தொடர்ச்சியாக வினைத்திறனுடன் செயற்படுத்தப்படுகின்றதா?
5. மாணவர் அடைவு மட்டத்தினை அதிகரிப்பது தொடர்பில் பாடசாலை மட்டக் கணிப்பீடுகள் முழுமையாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதா?

**4.2 கற்றல் கற்பித்தல் மதிப்பீடு தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்படவேண்டிய அம்சங்கள்**

1. பாடம் திட்மிடப்படும் போது மாணவர்களின் அளவு ரீதியானதும் சவால் நிறைந்ததுமான எதிர்பார்ப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்தி கற்றல் கற்பித்தல் வளங்கள் மற்றும் பொருத்தமான வழிமுறைகளுடன் குறுங்கால, நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதா?
2. ஒவ்வொரு மாணவர்களும் பாடத்தோடு தொடர்புபட்டு செயற்படும் முறை மற்றும் அவர்களின் வெவ்வேறு விருத்தி மட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா?
3. ஆசிரியரின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளை எந்தளவு தூரம் அடையப்பட்டுள்ளது?
4. ஆசிரியர் மூலம் பாவிக்கப்படுகின்ற பல்வேறு வெற்றிகரமான கற்பித்தல் முறைகள் இனம் காணப்பட்டு அவையனைத்தும் ஆசிரியர்களுக்கிடையில் பகிரப்பட்டு கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வாறு பலப்படுத்தப்பட முடியும்? இது தொடர்பில் எம்மால் மேலும் செய்யப்பட வேண்டியவை எவை?
5. ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய ஆசிரியர் தமது அறிக்கைகள் மற்றும் சரியான தரவுகள் (மதிப்பீடு / மாணவர் தொடர்பிலான) போன்றவற்றை பேணும் முறைமை பற்றி திருப்தி அடைய முடியுமா?
6. மதிப்பீட்டின் மூலம் பெறப்படும் தரவுகளின் பொருத்தப்பாடு தொடர்பில் ஒப்பீட்டு ரீதியாக ஆய்வு செய்து அபிவிருத்தி கருதிய நோக்கில் ஒழுங்கமைக்கப்படுகின்றதா? அவை பயன்பாடுடையனவா?
7. மாணவர் மதிப்பீட்டின் பின் மாணவர்களுக்கு வழங்கப்படும் பின்னூட்டல் மற்றும் பரிகார வேலைத்திட்டங்கள் அவர்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பில் எவ்வளவு பயனுறுதி உடையதாக அமையும்?

#### 4.3 முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்படவேண்டிய பண்புத்தர விடயங்கள்

1. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது காத்திரமான விளைவுகளை வெளிக்கொணர்வதற்கேற்ற வகையில் ஆக்கபூர்வமான நவீன கற்றல் கற்பித்தல் முறைகள் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? அவ்வாறாயின் எப்படி?

2. மாணவர்களின் பல்தரப்பட்ட திறன்களை விருத்திசெய்ய போதுமானதும் தேவையானதுமான வசதிகள் பாடசாலையில் வழங்கப்பட்டுள்ளதா? மாணவர்களின் தரங்களை இனங்கண்டு அதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் வழிகாட்டி, பாடநூல்கள், கற்றல் மூலவளங்கள் வழங்கப்படுகின்றதா?

3. ஆரம்ப பிரிவில் கற்கும் சகல மாணவர்களும் இடைநிலைப் பிரிவிற்கு செல்வதற்குத் தேவையான தேர்ச்சியை போதுமான அளவு அண்மித்துள்ளார்களா என உறுதிப்படுத்தமுடியுமா?

4. பாடவிருத்தி சம்பந்தமாக தரவட்டம் மற்றும் வகுப்பறைப் பாட பதிவேடுகள் ஊடாக போதுமான அளவு பங்களிப்பினை பெற்றுள்ளார்களா?

5. திட்டமிட்டபடி பாடசாலையில் செயற்படும் சகலவிதமான மாணவர் / ஆசிரியர் செயற்றிட்டங்களின் ஊடாக எதிர்பார்த்த கலைத்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ள முடிந்துள்ளதா?

#### 4.4 இணை பாடவிதானம் தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்படவேண்டிய அம்சங்கள்

1. சகல வகுப்புகளிலும் உள்ள மாணவர்களின் ஆற்றல்களை கவனத்தில் எடுத்து உச்ச பங்களிப்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் வெவ்வேறு துறைகளை உள்ளடக்கும் வகையிலும் இணை பாடவிதானம் தொடர்பாக முறையான திட்டம் ஒன்று தயாரிககப்பட்டுள்ளதா?அது பாடசாலையில் வினைதிறனுடன் செயற்படுத்தப்படுகின்றதா?

2. இணை பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றாத மாணவர்கள் தொடர்பில் உரிய காரணத்தை தேடி பிரச்சினைகள் மற்றும் தடைகள் இருப்பின் அது தொடர்பில் தலையீடுகள் இடம்பெற்றுள்ளதா?

3. மாணவர்களுக்கிடையில் ஆளிடைத்தொடர்பும், ஆளிடைத் திறன்களும் (தலைமைத்துவம், சுயஅபிமானம், பொறுப்புகூறுதல், சமத்துவம், வெற்றி தோல்வியை நடுநிலையில் நின்று ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஒழுங்குமுறையான செயற்பாடுகள்) போன்றவற்றில் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?

4. இணை பாடவிதான செயற்பாடுகள் மூலமாக பெறப்படுகின்ற அனுபவங்கள், அவை தொடர்பான விடயங்களை சாதிப்பதற்கு உரியவாறு பயன்படுத்துவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளதா?

#### 4.5 மாணவர் நலன்புரிச் செயற்பாடுகள் தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்பட வேண்டிய அம்சங்கள்

1. மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை போதிய கவனம் செலுத்துகினறதா?

2. பாடசாலை சகல மாணவர்களினதும் போசாக்கு செயற்படுதன்மை, தனித்துவம், கௌரவம் பொறுப்புடைமை தொடர்பாக கவனம் செலுத்துகின்றதா?

3. பாடசாலைக்கு நீண்ட காலமாகவும் / ஒழுங்காகவும் வராத மாணவர்கள் தொடர்பாக கவனம் எடுக்கப்படுகின்றதா? மாணவர் வரவை மேம்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகள் உள்ளதா?

4. மாணவர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் தொடர்பாக போதிய வழிகாட்டல் செய்யப்படுகின்றதா? திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கூடாக எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் கிடைக்கப்பெறுகின்றதா?

#### 4.6 தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள்

1. பாடசாலையின் ஒன்றிணைந்த முகாமைத்துவ செயற்பாடுகள் மூலம் அதன் நோக்கம், குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் என திருப்தி அடைய முடியுமா?

2. பாடசாலையின் இலக்கை அடையும் பொருட்டு பாடசாலையின் சகல தரப்பினரும் சுயமாகவே உயிர்ப்பான பங்களிப்பனைத் தருகின்றனரா?

3. பாடசாலைக் கருமங்களை ஒன்றிணைந்து பங்கிட்டுக்கொள்வதன் மூலம் இது அடையப்படுகின்றதா?

4. கடந்த வருடம் / வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கமைய இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக பாடசாலை சமூகம் அறிவுறுத்தப்பட்டுள்ளதா? அதன் பிரதிபலிப்பு யாது?

5. பல்வேறு வழிகளில் பாடசாலைக்கு கிடைக்கின்ற நிதி, பொருட்கள், சேவைகள் பாடசாலையின் நோக்கத்தை அடையும் வகையில் எந்தளவுக்கு வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் பயன்படுத்தப்படுகின்றது?

6. ஆசிரியர்கள் சமூகமளிக்காத சந்தர்ப்பங்களில் கற்றல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பேற்படாத வகையில் உத்தேச வேலைத்திட்டங்கள் பாடசாலையினுள் வினைத்திறனுடன் செயற்படுத்தப்படுகின்றதா? அவை கண்காணிக்கப்படுகின்றதா?

7. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD), உள்ளக மதிப்பீடு, வெளியக மதிப்பீடு, பாசாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் ஊடாக பெறப்பட்ட விடயங்களை எதிர்வரும் திட்டமிடல்களின் போது உள்வாங்கப்படுகின்றதா?

### 4.7 பௌதிக வள முகாமைத்துவம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள்

1. பாடசாலைச்சூழல் மற்றும் ஏனைய பௌதிக வளங்கள் உச்ச அளவில் பாவிக்கப்படுகின்றதா?

2. பௌதிக வள பாவனை தொடர்பாக முறையான ஒரு மரபு காணப்படுகின்றதா?

3. பௌதிக வளப் பற்றாக்குறை மற்றும் மேலதிகம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா?

4. விசேட கல்வித்தேவைகள் உள்ள மாணவர்களுக்கு பாடசாலைக்குள் பொருத்தமான வசதிகள் வழங்கப்படுகின்றனவா?

### 4.8 பாடசாலையும் சமூகமும் தொடர்பாகக் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள்

1. பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பாக பெற்றோரும் சமூகமும் வழங்கக்கூடிய பங்களிப்பு தொடர்பாக பாடசாலை அறிந்துள்ளதா?

2. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையில் சுமுகமான சாதகமான தொடர்பாடலும் உறவும் காணப்படுகின்றதா?

3. சமூகம் பாடசாலையின் அபிவிருத்திக்காக போதிய பங்களிப்பை வழங்குகின்றதா?

4. பாடசாலையானது சமூகத்திற்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பாக திருப்தியடைய முடிகின்றதா?

(பண்புத்தரம் தொடர்பான - 4.1)

| கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | இனங்காணப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறை | முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் (இருப்பின்) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. } ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாய" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.
මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/44/01/1/In.C.
දිනය / திகதி / Date } 2014.12.02

நகல் வரைபு - 31/2014

சுற்றுநிருப இலக்கம்

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்களுக்கும்.

## பாடசாலைக் கல்வியின் பண்புத்தரத்தை உறுதிசெய்யும் வகையிலான புதிய மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு வேலைத்திட்டம்.

கல்வி அமைச்சினூடாக நாட்டின் சகல பாடசாலைகளுக்குமான உள்ளக மற்றும் வெளியக மதிப்பீடு சம்பந்தமான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த மதிப்பீட்டுச் செயலொழுங்கினை மேலும் வலுவூட்டுவதற்காக தற்போது நடைமுறையிலுள்ள வேலைத் திட்டத்தை மேலும் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி பாடசாலை உள்ளக மற்றும் வெளியக மதிப்பீடுகளை செயற்படுத்தும் போது இதுவரையில் நடைமுறையிலிருந்த 2008/06 ஆம் இலக்க சுற்று நிருபம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், பாடசாலைகளில் மதிப்பீடு தொடர்பாக எதிர்காலத்தில் இச் சுற்றுநிருபத்தில் அடங்கியுள்ள ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்தச் சுற்றுநிருபத்துடன் அறிமுகப்படுத்தப்படும் "**பாடசாலை முறைமையில் பண்புத்தர உறுதிக்கான மதிப்பீட்டுச் செயற்பாடுகள்**" வழிகாட்டல் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுத்துறை, பண்புத்தரம், நியதிகள் மற்றும் சுட்டிகளுக்கு ஏற்ப உள்ளக வெளியக மதிப்பீடுகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

உள்ளக மற்றும் வெளியக மதிப்பீட்டுச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது அவ்அவ் நிறுவனங்களின் கடமைக் கூறுகள் பின்வருமாறு அமையும்.

## 1. பாடசாலை மட்டக் கடமைக்கூறுகள்.

1.1 பாடசாலை உள்ளக மதிப்பீட்டுக் கண்காணிப்புக்குழுவில் அதிபர் மற்றும் முகாமைத்துவக்குழு செயற்படல் வேண்டும்.

1.2 அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மதிப்பீட்டுத் துறைகளுக்கு ஏற்ப குழுக்கள் அமைக்கப்படல் வேண்டும். ஒரு மதிப்பீட்டுத்துறைக்குரிய குழு அங்கத்தவர் எண்ணிக்கையை பாடசாலையே தீர்மானிக்க வேண்டும். அத்துடன் அத்துறைக்கான தலைவரையும் நியமிக்க வேண்டும்.

1.3 கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுத்துறைக்காக நியமிக்கப்படும் மதிப்பீட்டுக்குழுவில் பாடசாலையின் முகாமைத்துவக்குழுவும் சிரேஷ்ட ஆசிரியர்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

1.4 ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் சகல மதிப்பீட்டுத் துறைகளுக்குமான உள்ளக மதிப்பீட்டுத் திட்டமிடல் இணைப்பு 01 இன்படி தயாரிக்கப்படல் வேண்டும்.

1.5 பாடசாலையில் சகல மதிப்பீட்டுத் துறைகளுக்குமான கோவைகள் பேணப்படல் வேண்டும்.

1.6 மேற்படி உள்ளக மதிப்பீட்டுக் குழுக்களினுடாக, குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒரு முறையேனும் உள்ளக மதிப்பீடு நடாத்தப்பட்டு, துறைகளுக்கான புள்ளிகளை வழங்கி இணைப்பு 2 இற்கு ஏற்ப பாடசாலைக் கல்விப் பண்புத்தரச் சுட்டியைக் கணிப்பிடல் வேண்டும்.

1.7 சகல மதிப்பீடுகளின் முடிவிலும் மதிப்பீட்டு அறிவுரைப்பு வழிகாட்டியில் ஒவ்வொரு துறைக்குமாக குறிப்பிட்டுள்ள பண்புத் தரம் பற்றி ஆசிரியர் குழாத்துடன் முன்னேற்ற ஆய்வு கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தி தொகுப்பு அறிக்கை ஒன்றை தயாரித்து பேணுதல் வேண்டும்.

1.8 ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 30ம் திகதிக்கு முன் பாடசாலைக் கல்விப் பண்புத்தர சுட்டிப் பெறுமதி உள்ளடக்கி (இணைப்பு 2 க்கு ஏற்ப) தயாரிக்கப்பட்ட தொகுப்பு புள்ளி அறிக்கையை வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு இணைப்பதிகாரிக்கும் அதன் பிரதியை கோட்டக் கல்வி பணிப்பாளருக்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

1.9 இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து (5) வருடங்களுக்கான பாடசாலைப் பண்புத்தரச் சுட்டிப் பெறுமதியினை உள்ளடக்கிய படிவத்தினை பூரணப்படுத்தி பாடசாலையில் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1.10 மேற்படி ஒழுங்குவிதிகளின்படி உள்ளக மதிப்பீடு செயற்படுத்தப்பட்ட பின் இணைப்பு 04 க்கு அமைய இணங்காணப்பட்ட மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்களில் முன்னுரிமைப்படுத்தி 5 விடயங்களைத் தெரிவுசெய்து அடுத்த வருடத்தின் வருடாந்த அமுலாக்கத் திட்டத்தில் உள்வாங்கப்படல் வேண்டும்.

1.11 உள்ளக மற்றும் வெளியக மதிப்பீட்டு அறிக்கைகளை முறையாக கோவைப்படுத்தி வைத்திருப்பதுடன் மதிப்பீட்டுச் சிபாரிசுகளை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 2. கோட்ட, மற்றும் வலயமட்டக் கடமைக்கூறுகள்.

2.1 உள்ளக மதிப்பீடுகள் நடத்துவது தொடர்பாக வலய மற்றும் கோட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அறிவுறுத்தப்படல் வேண்டும்.

2.2 சகல பாடசாலைகளிலும் உள்ளக மதிப்பீடுகள் நடைபெறுகின்றனவா? என்பதைக் கண்காணித்தல் வேண்டும்.

2.3 முறையான திட்டமிடலுக்கு ஏற்ப பாடசாலையின் வெளியக மதிப்பீடுகளை நடாத்துதல், அறிக்கைகளை பாடசாலைகளுக்கு அனுப்புதல் மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

2.4 பாடசாலைகளினால் முன்வைக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளை கலந்துரையாடுவதன் மூலமும் வெளியக மதிப்பீடுகளினால் வெளிப்படும் காரணிகளுக்கு ஏற்ப பாடப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் இணைந்து பின்னூட்டல் வேலைத் திட்டங்களை செயற்படுத்தல் வேண்டும்.

2.5 வலய மற்றும் கோட்ட மட்டத்தில் நடாத்தப்படும் வெளியக மதிப்பீட்டுப் புள்ளி அறிக்கையினை இணைப்பு 5 இற்கு ஏற்ப தயார்செய்து கீழே குறிப்பிடப்படும் திகதிக்கு முன் மாகாண முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டு அலகின் இணைப்பதிகாரிக்கு பிரதியுடன் கல்லி அமைச்சின் பாடசாலை முகாமைத்துவத் தர உறுதிப்பாட்டுப் பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும்.

| பாடசாலைத் தவணை | அறிக்கை அனுப்ப வேண்டிய திகதி |
|---|---|
| முதலாந் தவணையில் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட பாடசாலைகளின் தொகுப்பு அறிக்கை | ஏப்பிரல் 30 |
| இரண்டாந் தவணைக்குள் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட பாடசாலைகளின் தொகுப்பு அறிக்கை | ஆகஸ்ட் 31 |
| மூன்றாந் தவணைக்குள் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட பாடசாலைகளின் தொகுப்பு அறிக்கை | நவம்பர் 15 |

2.6 கல்வி அமைச்சின் முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுப் பிரிவினாலும்,மாகாணக் கல்விப் திணைக்களத்தினாலும் னாலும் ஒழுங்கு செய்யப்படுகின்ற வெளியக மதிப்பீடு மற்றும் மீளாய்வுச் செயற்பாடு தொடர்பில் வலய / கோட்ட கல்விக் காரியாலங்களின் அதிகாரிகள் பங்கு பற்ற வேண்டும்.

## 3. மாகாணமட்ட கடமைக்கூறுகள்

3.1 மதிப்பீடு தொடர்பாக மாகாணத்தின் சகல வலயங்கள், கோட்டங்கள் மற்றும் பாடசாலைகளை அறிவூட்டல் வேண்டும்.

3.2 மாகாணத்தின் சகல வலயங்களிலும், கோட்டங்களிலும் வெளியக மதிப்பீடும் பாடசாலைகளில் உள்ளக மதிப்பீடுகளும் நடைபெறுகின்றதா என்பதை கண்காணித்தல் வேண்டும்.

3.3 மாகாண மட்டத்தில், பாடசாலைகளை வெளியக மதிப்பீட்டுக்கு உட்படுத்தல், அது தொடர்பான அறிக்கைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புதல் மற்றும் மீளாய்வுச் செயற்பாடுகள் என்பன நடாத்தப்படல் வேண்டும்.

3.4 மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்ற வெளியக மதிப்பீட்டுப் புள்ளிகள் தொடர்பான தொகுப்பு அறிக்கையை (இணைப்பு 5 க்கு ஏற்ப) மேற்கூறப்பட்ட திகதிகளுக்கு முன் கல்வி அமைச்சின் முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பாடசாலைக் கல்வியின் பண்புத் தரத்தை உறுதி செய்வதற்காக மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுச் செயலொழுங்கு தொடர்பாக தேசிய மட்டத்திலான பொறுப்பினை கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டுக் கிளையைச் சாரும். தேசிய மட்டத்திலான வெளியக மதிப்பீட்டு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், மதிப்பீடு தொடர்பான கண்காணிப்பு கல்விப் பண்புத் தர உறுதிப்பாடு தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்களை நடாத்துதல், வருடாந்த அறிக்கையைத் தயார் செய்தல் என்பன முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக் கிளையினூடாக மேற்கொள்ளப்படும்.

கவனிக்க வேண்டியவை :

உள்ளக மற்றும் வெளியக மதிப்பீட்டின் போது, ''**பாடசாலை முறைமையில் பண்புத்தர உறுதிக்கான மதிப்பீட்டுச் செயற்பாடுகள்**'' எனும்அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள நியதி மற்றும் சுட்டிகள் அனைத்தையும் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படல் வேண்டும். ஒரு பாடசாலையில் சில குறிப்பிட்ட நியதிகளோ, சுட்டிகளோ பொருத்தமற்றிருப்பின் அவற்றை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவேண்டிய அவசியம் இல்லை.

உதாரணம் :- கணினி விஞ்ஞான கூடம் அல்லது கணினி அறை இல்லாத பாடசாலை அதற்கான நியதிகளை அகற்ற முடியும்.

அனுர திசாநாயக்க,
செயலாளர்.
கல்வி அமைச்சு

பிரதிகள்: - கணக்காய்வாளர் நாயகம் - அறிந்து கொள்வதற்காக.
உள்ளக கணக்காய்வாளர் நாயகம்- அறிந்து கொள்வதற்காக.
கல்வி அமைச்சின் சகல விடயப் பணிப்பாளர்கள் - அறிந்து கொள்வதற்காக.

இணைப்பு 01

## உள்ளக மதிப்பீட்டுத் திட்டம்

பாடசாலையின் பெயர் :-

கல்வி வலயம் :-

| துறைகள் | மதிப்பீடு நடாத்தப்படும் கால அட்டவணை | | | | | | | | | பொறுப்பு | கண்காணிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தை | மாசி | ப | வை | ஆனி | ஆடி | பு | ஐ | கா | | |
| மாணவர் அடைவு | | | | | | | | | | | |
| கற்றல்-கற்பித்தல் மதிப்பீடு | | | | | | | | | | | |
| முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | | | | | | | | | | | |
| இணை பாடவிதான செயற்பாடுகள் | | | | | | | | | | | |
| மாணவர் நலன்புரி | | | | | | | | | | | |
| தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | | | | | | | | | | | |
| பௌதீக வள முகாமைத்துவம் | | | | | | | | | | | |
| பாடசாலையும் சமூகமும் | | | | | | | | | | | |

இணைப்பு 02

## உள்ளக மதிப்பீட்டுச் சுருக்கப் புள்ளி மற்றும் பண்புத்தரச் சுட்டியைத் தயாரித்தல்

பாடசாலைப் பெயர் -

கல்வி வலயம் -

வருடம் -

| மதிப்பீட்டுத்துறைகள் | மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்ட சுட்டிகளின் எண்ணிக்கை | பெற்றுக் கொள்ளக் கூடிய உச்சப் புள்ளிகள் | பெற்றுக் கொண்ட புள்ளிகள் | நூற்று வீதம் | மொத்த மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| மாணவர் அடைவு | | | | | |
| கற்றல்-கற்பித்தல் மதிப்பீடு | | | | | |
| முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | | | | | |
| இணை பாடவிதான செயற்பாடுகள் | | | | | |
| மாணவர் நலன்புரி | | | | | |
| தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | | | | | |
| பௌதீக வள முகாமைத்துவம் | | | | | |
| பாடசாலையும் சமூகமும் | | | | | |
| பாடசாலைக் கல்விப் பண்புத் தரச் சுட்டி | | | | | |

மதிப்பீட்டுக்கு உட்படுத்திய ஆசிரியர் எண்ணிக்கை -

அதிபரின் கையொப்பம் -

பதவி முத்திரை -

இணைப்பு 03

## வருடாந்த கல்வி பண்புத்தரச் சுட்டிகள் பற்றிய அறிக்கை

பாடசாலையின் பெயர் -

கல்வி வலயம் -

| மதிப்பீட்டுத்துறைகள் | உள்ளக மதிப்பீட்டுப் புள்ளிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
| மாணவர் அடைவு | | | | | |
| கற்றல்-கற்பித்தல் மதிப்பீடு | | | | | |
| முறையான கலைத்திட்ட முகாமைத்துவம் | | | | | |
| இணை பாடவிதான செயற்பாடுகள் | | | | | |
| மாணவர் நலன்புரி | | | | | |
| தலமைத்துவமும் முகாமைத்துவமும் | | | | | |
| பௌதீக வள முகாமைத்துவம் | | | | | |
| பாடசாலையும் சமூகமும். | | | | | |
| பாடசாலைக் கல்விப் பண்புத் தரச் சுட்டி | | | | | |

இணைப்பு 04

## உள்ளக மதிப்பீட்டின்படி பாடசாலை பற்றிய வெளிப்பாடு

உள்ளக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்பு அத்துறைகளுக்கு உரிய நியதிகள், சுட்டிகள் மற்றும் பண்புத்தர நிலைமைகளைக கவனத்திற்கொண்டு பாடசாலையில் நிலவும் சிறப்புக்கள், பிரச்சனைகள் மற்றும் அபிவிருத்தியடையவேண்டிய துறைகளை இணங்கண்டு சாராம்ச அறிக்கையொன்றை வைத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வறிக்கைக்கு அமைவாக கீழ்வருமாறு பாடசாலை பற்றிய வெளிப்பாடு ஒன்றை அறிக்கைப்படுத்த வேண்டும்.

பாடசாலையின் பெயர் -

உள்ளக மதிப்பீட்டு வெளிப்பாட்டுக்கமைவாக பாடசாலையின் சிறப்புக்கள்/ பலங்களாக அறியக்கூடிய பிரதான விடயங்கள். (இங்கு பிரதான 5 விடயங்களைக் குறிப்பிடுக.)

01.

02.

03.

04.

05.

உள்ளக மதிப்பீட்டை வெளிப்பாட்டுக்கு அமைய அடுத்த வருடத்துக்குள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென இணங்கண்ட முக்கிய விடயங்கள் : (இங்கு பிரதான 5 விடயங்களைக் குறிப்பிடுக.)

01.

02.

03.

04.

05.

இணைப்பு 05

**பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டுச் சுருக்கள அறிக்கை.**

கல்வி வலயம் -

வருடம் - தவணை -

| ZONE | NO | SCHOOL | TYPE | SCHOOL CATEGORY | STUDENT ACHIEVEMENTS | LEARNING & TEACHING | CURRICULUM MANAGEMENT | CO-CURRICULAR ACTIVITIES | STUDENT WELFARE | LEADERSHIP & MANEGMENT | PHYSICAL RESOURCE | SCHOOL & COMMUNITY | SEQI | NO.OF.TEACHERS EVALUATED (EXTERNAL EVALUATION) | EVALUATED BY (PROVINCIAL / ZONAL / DIVISIONAL) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | | | | | | | | | | | | |
| | 2 | | | | | | | | | | | | | | |
| | 3 | | | | | | | | | | | | | | |
| | 4 | | | | | | | | | | | | | | |
| | 5 | | | | | | | | | | | | | | |
| | 6 | | | | | | | | | | | | | | |
| | 7 | | | | | | | | | | | | | | |
| | 8 | | | | | | | | | | | | | | |

❖ இங்கு உட்படுத்தப்படுகின்ற சகல விபரங்களையும் Times New Roman ஆங்கில எழுத்துருவிலும் (Fonts) Capital Block எழுத்துக்களில் தயாரிக்கவும். மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாத துறைகள் இருப்பின் "X" அடையாளத்தை இடவும்.

❖ மேல் காட்டப்பட்ட School Category நிரலில் எதிர்பார்க்கப்படுவது மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்ட பாடசாலை தேசிய பாடசாலையாயின் "NS" எனவும், மாகாணப் பாடசாலையாயின் "PS" எனவும் குறிப்பிடவும்.

❖ ஒவ்வொரு மதிப்பீட்டுத் துறைகளுக்குமாக பெற்றுக் கொண்ட புள்ளிகளின் நூற்றுவீதத்தினை உரிய நிரல்களில் பதிவு செய்க.

The World Bank

Transforming the School Education System as the Foundation of a Knowledge Hub Project (TSEP)